


31ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நிதி: 31 பாலம்: 15 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் August 01, 2021

# கோலாகலமாக ஆரம்பமானது ஒலிம்பிக்!

கோவிட்-19 பெரும் தொற்று நோய்ப் பரவல் காரணமாகப் பின்போடப்பட்ட 2020ஆம் ஆண்டிற்கான கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் ஜப்பானின் ரோக்கியோ நகரில் ஜூலை 23ஆம் திகதி கோலாகலமாக ஆரம்பமானது.

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் Thomas Bach மற்றும் ஜப்பானிய ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் Seiko Hashimoto ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து ஜப்பானியப் பேரரசர் Narahito, 2020ஆம் ஆண்டிற்கான கோடைகால ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்வை அதிகாரபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

கோவிட்-19 பெரும் தொற்று நோய்ப் பரவல் இன்னமும் தொடர்வதால் வழமைக்கு மாறாக இம்முறை பார்வையாளர்கள் ஒலிம்பிக் விளையாட்டுகள் நடைபெறும் அரங்குகளுக்குள் அனுமதிக்கப்படவில்லை. 68,000 ஆசனங்களைக் கொண்ட அரங்கில் ஒலிம்பிக் ஆரம்ப நிகழ்வுகள் மிகவும் கோலாகலமாக நடைபெற்றாலும் முக்கிய பிரமுகர்கள் மற்றும் தொண்டர்கள் என ஆயிரம் பேர் வரையில் மட்டுமே பார்வையாளர்களாக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அதிகரித்துவரும் கோவிட்-19 தொற்று நோய்ப் பரவல் காரணமாக ரோக்கியோ நகரம் அவசரகால நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளது. விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள ஜப்பான் வந்த சில விளையாட்டு வீரர்களுக்கு கோவிட்-19 தொற்று இருப்பது பரிசோதனை மூலம் தெரிய வந்துள்ளதால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஜப்பானில் நடைபெற்ற ஒரு பொதுக் கருத்துக் கணிப்பில் கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலின்போது ஒலிம்பிக் விளையாட்டுக்களை ஜப்பானில் நடத்தப் பெரும்பாலான பொதுமக்கள் விரும்பவில்லை எனத் தெரிவித்திருந்தனர். ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்ற அரங்குக்கு வெளியில் பலர் ஒலிம்பிக் போட்டிகளை கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவலின்போது நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஒலிம்பிக் ஆரம்ப நிகழ்வுக்கு அனுமதிக்கப்பட்ட முக்கிய பிரமுகர்களில் ஒருவர் பிரான்ஸ் நாட்டின் அதிபர் Emmanuel Macron ஆவார். இவர் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் "ஜப்பான் ஒலிம்பிக் விளையாட்டுக்களைத் தற்போது நடத்துவது சரியானது. ஏனெனில் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் தற்போது உலக மக்களுக்கு மிகவும் முக்கியமாகத் தேவைப்படும் ஒத்துழைப்பு உணர்வைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவற்றை நடத்த இதுவே தக்க தருணம். ஜப்பானிய அதிகாரிகளின் முடிவு சரியானதே. இனிவரும் ஆண்டுகளில் தொற்று நோய்ப் பரவல் எவ்வாறு இருக்கும் என்று யாருக்கும் தெரியாது" என்றார்.



இம்முறை நடைபெற இருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் 11,000இற்கு மேற்பட்ட வீரர்கள் 33 விதமான விளையாட்டுகளில் பங்குபற்றுகின்றனர். இம்முறை எல்லா விளையாட்டு வீரர்களும் முன்கூட்டியே ஒலிம்பிக் நடைபெறும் ரோக்கியோ நகருக்கு வரமாட்டார்கள். அவர்கள் தமது விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒலிம்பிக்கின் ஆரம்ப நிகழ்வுகளில் ஒரு பகுதி வெளிநாட்டு வீரர்களே கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம்முறை ஒலிம்பிக் விளையாட்டில் Karate, Surfing, Skateboarding, மற்றும் Sport Climbing ஆகிய நான்கு விளையாட்டுக்களும் முதற்தடவையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த Baseball மற்றும் Softball ஆகிய விளையாட்டுகள் இம்முறை மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

கனடாவில் இருந்து 371 பேர் இம்முறை நடைபெறும் ஒலிம்பிக்கில் பங்குபற்றுகின்றனர். இவர்களில் 226 (61%)பேர் பெண்கள் 145பேர் ஆண்கள். இவர்கள் இம்முறை நடைபெறும் 33 விளையாட்டுகளில் 30 விளையாட்டுகளில் பங்குபற்றுகின்றனர். கனடிய விளையாட்டு வீரர்களில் 30பேர் மட்டுமே ஆரம்ப நிகழ்வில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர்.

ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றிய கனடிய விளையாட்டு வீரர்களின் அணிக்குத் தலைமைவகித்து Rugby விளையாட்டில் பங்குபற்றும் Nathan Hirayama மற்றும் Basketball விளையாட்டில் பங்குபற்றும் Miranda Ayim கனடிய தேசியக் கொடியைத் தாங்கிச் சென்றனர். கனடாவிலிருந்து ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளுக்குப் பங்குபற்றும் 371 விளையாட்டு வீரர்களுடன் அவர்களது பயிற்சியாளர்கள் (Coaches) 131 பேரும், குழுக்களாக விளையாடும் விளையாட்டுகளின் போது ஒருவருக்குப் பதிலாக மாற்றுவதற்கு வசதியாக 9 மேலதிக விளையாட்டு வீரர்களும் கனடிய அணியில் செல்கின்றனர். 1984ஆம் ஆண்டில் Los Angelesஇல் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்குப் பின்னர் இதுவே கனடிய அணியில் பங்குபற்றும் அதிகூடிய விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையாகும்.

கனடியப் பிரதமர் யூலை 23இல் வெளியிட்ட அறிக்கையில், இந்தத்

தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

























RE/MAX ACE REALTY INC., BROKERAGE
EXPERIENCE THE DIFFERENCE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5

Thas Thirunavukkarasu Dip-in- Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com



Warden / St.Clair


Freehold Town - 3BR + 3WR

Courtice


Detached Bungalow- 2BR + 2WR

Victoria Park / Ellesmere


Semi-Detached - BR: 3+3 WR:2

Markham/ Eglinton


BR: 6+4 WR: 7

Donmills/Sheppard


900+ SF - 2BR + 2WR

Bowmanville


Near School - 4BR + 3WR

Birchmount/Lawrence


900+ SF BR: 2 WR: 2

Markham/16 th


BR: 1+1 WR:1 Maint. Fee: $475



# Amma Pawn Broker
## அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை

அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

# முன்னோருக்கு திதி கொடுப்பதற்கு புகழ்பெற்ற புனித கயாவின் சிறப்புகள்



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

இந்து சமயத்தினரின் புண்ணிய தலமான கயா, காசியிலிருந்து 250 கிமி தொலைவில் இந்தியாவின் பீகார் மாநிலத்தில் பால்குனி நதிக்கரையில் அமைந்துள்ள நகரமாகும். கயா நீத்தார் கடனுக்காகச் செய்யப்படும் சிறப்பு பூஜைகளுக்கு மிகவும் புகழ்பெற்ற தலமாக விளங்குகின்றது. இராமாயண மற்றும் மகாபாரத காலத்திலிருந்தே மூதாதையர்களுக்கு 'பிண்ட்தான்' என்று அழைக்கப்படும் திதி கயாவில் அளிப்பது புனிதமானதாகக் கருதப்படுகின்றது. புராணங்களின்படி, இராமர் தனது சகோதரர்கள் மற்றும் சீதையுடன் கயாவுக்கு வந்து தனது தகப்பனார் ராஜா தஷரதர்க்கு சீதா தேவி மூலம் திதி கொடுத்துள்ளனர். கயாவில் மட்டும்தான் பெண்கள் தங்களது முன்னோர்களுக்கு திதி கொடுக்க முடியும். மேலும் திதிக்காக பூஜை செய்யப்பட்ட கறுப்பு எள் கலந்த சாத உருண்டைகளை இங்குள்ள விஷ்ணு பகவானின் பாதத்தில் அர்ப்பணம் செய்து வழிபடுகின்றனர். இப்படி வழிபடுவதன் மூலம் முன்னோர்களின் ஆத்மா நற்கதி பெற்று மோட்சம் அடைவதாகப் புராணங்கள் கூறுகின்றன. இதன் காரணமாக, தங்களது முன்னோர்களுக்கு திதி அளிப்பதற்காக உலகத்தின் எல்லாப் பகுதியிலிருந்தும் மக்கள் இங்கு வருவதை வழக்கமாக கொண்டுள்ளனர். மேலும் காசிக்கு வரும் எல்லா பக்தர்களும் கயாவுக்கு வந்து தங்களது முன்னோர்களுக்குத் திதி கொடுத்துவிட்டு செல்வதன் மூலம் புண்ணியத்தைப் பெற்றதுடன் மட்டுமல்லாமல் தனது முன்னோர்களுக்கு முக்தி வழங்கிவிட்டுச் செல்வதை நினைத்து பெருமிதம் கொள்கின்றனர்.




கயாவில் முன்னோர்களுக்குச் செய்ய வேண்டிய பூஜைகளை செய்து முடித்தபின் முக்கியமாகக் காணவேண்டிய இடங்கள் யாதெனில் (1) விஷ்ணு பாதம் ஆலயம் - பிறப்பும் மற்றும் இறப்பும் இல்லாப் பரம் பொருளாகவும் மற்றும் மூவுலகையும் காக்கும் விஷ்ணு பகவானுக்கு அற்பணிக் கப்பட்டது. எண்கோண வடிவில் 30 மீட்டர் உயரமுள்ள ஆலயத்தின் கருவறையில் 40 செமீ நீளத்தில் கருங்கல்லில் பதிக்கப் பட்ட விஷ்ணுவின் பாதம் உள்ளது. இந்த ஆலயத்துக்கு இராமர் மற்றும் சீதை வருகை தந்துள்ளனர் என்று புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2) அக்சய வடம்- பூமியில் மிகப் பழமையான ஆலமரம் என்று நம்பப்படுகின்றது. மேலும் சீதையின் ஆசீர்வாதம் பெற்ற இந்த அழியாத ஆலமரத்தின் வேர்பகுதி பிராக்ராஜ்யிலும், நடுப்பகுதி காசியிலும் மற்றும் நுனிப்பகுதி கயாவிலும் உள்ளதாகப் புராணங்கள் சொல்கின்றன.



இந்த மரத்தடியில் இராமர் மற்றும் சீதை ஓய்வு எடுத்ததாக இராமாயண காவியம் சொல்கின்றது. (3) மங்கள கௌரி ஆலயம் - இந்த ஆலயம் 51 சக்தி பீடங்களில் முக்கியமானதாகும். இங்கு கௌரி தேவி கருணையின் வடிவமாகவும் கேட்டதைக் கொடுக்கும் அன்னையாகவும் விளங்குகின்றாள். இந்த ஆலய வளாகத்தில் காளி, விநாயகர், ஹனுமான் மற்றும் சிவபெருமானுக்கும் தனித்தனி கோயில்கள் உள்ளன. (4) சீதா குண்ட் - விஷ்ணு பாத கோவிலுக்கு அருகில் பால்கு ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இங்குதான் சீதா தேவி ராஜா தஷரதருக்கு திதி கொடுப்பதற்கு பூஜை செய்ததாக நம்பப்படுகின்றது.

டெல்லி மற்றும் காசியில் இருந்து கயா செல்வதற்க்கு நேரடி ரயில் மற்றும் விமான சேவைகள் உள்ளன. கயாவில் தங்குவதற்கு நவீன ஹோட்டல் வசதிகள் இல்லை. இருப்பினும் போதுமான அளவில் நல்ல தர்மசாலைகள் உள்ளன. கயாவிற்கு அருகிலுள்ள புத்தகயாவில் நவீன ஹோட்டல் இருப்பதால் பக்தர்கள் அங்கு தங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். கயா மற்றும் புத்தகயாவை சுற்றிப்பார்பதற்கு ஒரு நாள் போதுமானது.






# சீரழிக்கப்படும் சிறுமிகள்




இலங்கையில் தற்போது கொரோனா வைரஸ் தொற்றின் நான்காவது அலை தொடர்பான தகவல்கள் அச்சுறுத்தலாக வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், அதனையும் கடந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரிச்சார்ட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த 16 வயது பெண்ணின் மரணம் தொடர்பான செய்திகள் அதிக கவனத்தை பெற்று வருகின்றது. சிறுமியின் மரணம் தொடர்பில் நாளாந்தம் பரபரப்பான தகவல்கள் வெளியாகி வருகின்றன.

முன்னதாக, 15 வயது சிறுமி ஒருவர் இணையத்தளத்தில் விளம்பரம் செய்யப்பட்டு பாலியல் தேவைக்கு விற்பனை செய்யப்பட்ட செய்தி அதிர்ச்சியளிப்பதாக இருந்தது. அந்த சிறுமியை பாலியல் தேவைக்கு உட்படுத்திய 30இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டோரில் கோடீஸ்வரர்களும் உள்ளடங்கியுள்ளனர். வங்கி முகாமையாளர், பொலிஸ் அதிகாரி மட்டுமன்றி மாலைதீவின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஒருவரும் கைது செய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

சிறுமியின் தாய் மற்றும், சிறுமியை இணையத்தளத்தில் விளம்பரம் செய்தோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது, ரிச்சார்ட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த 16 வயது சிறுமியின் மரணம் தொடர்பில் வெளியாகிக் கொண்டிருக்கும் தகவல்கள் அதிகம் பரபரப்பானதாக அமைந்துள்ளன. நாளாந்தம் புதிய புதிய தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

தலவாக்கலை- டயகமவைச் சேர்ந்த 16 வயதான சிறுமி ஹிஷாலினி நாடாளுமன்ற உறுப்பினர் ரிச்சார்ட் பதியுதீனின் கொழும்பு பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள இல்லத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்ட நிலையில், கடந்த மாதம் 03ஆம் திகதி எரிகாயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த 15ஆம் திகதி மர்மான முறையில் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றது. ரிச்சார்ட் பதியுதீனின் மனைவி, மனைவியின் தந்தை மற்றும், சிறுமியை வேலைக்கு அழைத்துவந்த தரகர் உள்ளிட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். முன்னதாக சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவர் பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்கப்பட்டதாக அறிக்கை வெளியானது.

இதனையடுத்து, இந்த சிறுமியை பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்கியது யார்? என்ற கேள்வியும், சிறுமி எவ்வாறு தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழக்க நேரிட்டது? போன்ற கேள்விகளும் எழுந்தன.

ஜூலை 3ஆம் திகதி மாலை 6.45இற்கு சிறுமியை தீப்பற்றிக் கொண்டுள்ளது எனினும், இரவு 8.30இற்கே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வீட்டில் ரிச்சார்ட் பதியுதீனுக்கு சொந்தமான வாகனங்கள் இருந்த போதும் அதில் சிறுமியை உடனடியாக வைத்திய சாலைக்கு கொண்டு செல்லவில்லை.

ரிஷாட் பதியுதீனின் மனைவியின் தந்தையே அச்சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். சிறுமியின் பெயர், வயது உள்ளிட்ட சகல விபரங்களையும் போலியாக கொடுத்துள்ளார். குறிப்பாக, சிறுமியின் பெயரை சிங்களப் பெயராகவும் வயதை 18 எனவும், மாற்றிக் கொடுத்துள்ளார் இதற்கு காரணம் என்ன?

ரிச்சார்ட் பதியுதீனின் வீட்டில் பொலிஸ் சீருடையில் இருந்தவர், சிறுமியின் சகோதரருக்கு அழைப்பை எடுத்து, "இந்த விவகாரத்தை இலகுவில் முடித்துக் கொள்வோம்" எனக் கூறியுள்ளதோடு சிறுமியின் சகோதரனிடம் 50 ஆயிரம் ரூபாயை கொடுத்துள்ளார் இதன் உள்நோக்கம் என்ன? அத்துடன், ரிச்சார்ட் பதியுதீனின் வீட்டிற்கு எவ்வாறு மண்ணெண்ணெய் வந்தது?

இவ்வாறு அடுக்கடுக்கான கேள்விகளுக்கு விடை தேடும் பணியில், விசாரணை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதனை விடவும், ரிச்சார்ட் பதியுதீனின் வீட்டில் முன்னர் வேலை செய்த பல பெண்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டு வருகின்றது.

ரிச்சார்ட் பதியுதீனுடைய இல்லத்தில் கடந்த 2015 - 2019வரை வீட்டு பணிப்பெண்ணாக வேலைக்கமர்த்தப்பட்டிருந்த யுவதி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியமை தொடர்பில் ரிஷாட் பதியுதீனின் மனைவியின் சகோதரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரிச்சார்ட் பதியுதீன் வீட்டில் 2010ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரையிலும் 11 யுவதிகள் பணியாற்றி உள்ளனர் என தற்போது அறியப்பட்டுள்ளது. அதில், மரணமடைந்த டயகமவைச் சேர்ந் 16 வயதான சிறுமியும் அடங்குகின்றார்.

ஏனைய 10 பேரில், ஐவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஏனையோரிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், அந்த வீட்டில் பணியாற்றிய மேலும் மூன்று யுவதிகள் மர்மான முறையில் மரணமடைந்துள்ளமையும் விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளதாக என பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிலொரு பெண், பம்பலப்பிட்டியவில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்றும் அறிய முடிகின்றது.

ரிஷாட்டின் வீட்டில் பணிப்பெண்களாக வேலை செய்த 11 யுவதிகளும் டயகம மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்தோர் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

ரிச்சார்ட் பதியுதீனின் மாமனாரான அதாவது, ரிச்சார்ட்டின் மனைவியின் தந்தையும் வீட்டில் பணியாற்றிய யுவதிகளுடன் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு வந்ததாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்நிலையில், நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக புதைக்கப்பட்ட ஹிசாலினியின் சடலம் 30ஆம் திகதி காலை தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

ஹிசாலியின் மரணத்தின் பின்னணியில் பல்வேறு சந்தேகங்கள் தோன்றியதன் காரணமாக நாடளாவிய ரீதியில் குற்றவாளிகளை அடையாளம் கண்டு நீதியின் முன் நிறுத்த வேண்டும் என கோரி போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

சிறுமியின் தாயார் தனது மகளின் மரணத்தில் சந்தேகம் உள்ளது எனவும், புதைக்கப்பட்ட மகளின் உடலை தோண்டி மீண்டும் பிரேத பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மனு ஒன்றினையும் சமர்ப்பித்துள்ளார். இதனையடுத்தே சிறுமியின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்படல் வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

இதேவேளை, தற்போது, குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுப்புக் காவலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிச்சார்ட் பதியுதீனும் இவ்விடயத்தில் குற்றவாளியாக பார்க்கப்படுகின்றார். இவரின் ஒப்புதலுடனேயே 16 வயது சிறுமி ஹிசாலினி அவரது வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி தவறானது என்பது நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ரிச்சார்ட் பதியுதீனுக்கு தெரியாததல்ல. சிறுமி மரணம் தொடர்பில் தற்போது கைது செய்யப்பட்டுள்ளவர்களுடன் ரிஷாட் பதியுதீனும் சேர்க்கப்படுவார் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மலையகம் மட்டுமல்ல, வடக்கு கிழக்கிலும், சிங்களப் பிரதேசங்களிலும் இருந்து சிறுவர்கள் கொழும்பு போன்ற இடங்களில் பல்வேறு பணிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு அமர்த்தப்படுகின்றனர். வறுமை காரணமாக இவ்வாறு தங்கள் பிள்ளைகளை சில பெற்றோர்கள் அனுப்பி வைக்கின்றனர். வீட்டு வேலைகளுக்கு என்று அழைத்துச் செல்லப்படும் சிறுமிகள், யுவதிகள் பாலியல் தொழில்களுக்கும் விடப்படுகின்றனர்.

இதனைத் தடுக்க பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். வறுமை நிலையால் இது நடைபெறுகின்றதென்றால் அதனை களைவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

பிள்ளைகளை இவ்வாறு ஆசை காட்டி அழைத்துச் செல்லும் தரகர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். சிறுவர்களை வீட்டு வேலைகளுக்கு அமர்த்தும் செல்வந்தர்கள் கடுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்துப்படல் வேண்டும்.




விளம்பரம்
VLAMBARAM
31ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# MORTGAGE

MORTGAGE IN ANY SITUATION

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC)

⇒ Private 1st Mortgage
(No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



www.mortgageclinicccanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது



Cell : 416-624- 4843
416-613-2788 / 416-816-9011

ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP
Team Leader / Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# நாட்டை முழுமையாகத் திறப்பது தற்போது சாத்தியமானதா?

- விகிர்தன் -

எதிர்வரும் 2ஆம் திகதி திங்கள் கிழமை நாட்டை முழுமையாக திறப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றின் அதிகரிப்பு காரணமாக, மாகாணங்களுக்கு இடையில் அமல்படுத்தப்பட்டிருந்த போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் யாவும் திங்கட்கிழமை முதல் முழுமையாக நீக்கப்படும் என்று அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மே மாதம் 11ஆம் திகதி முதல் நாடு முழுவதும் அமலாகும் வகையில், மாகாணங்களுக்கு இடையில் பயணத் தடை விதிக்கப்பட்டது. இதனால் மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்து முழுமையாக தடை செய்யப்பட்டிருந்தது. அந்தத் தடை சில தினங்களுக்கு மட்டுமே நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்ட போதும், கொரோனா தொற்றுப் பரவலின் வேகம் அதிகரித்தமையால், தடை நீடிக்கப்பட்டது. கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக் கையும், கொரோனாவால் பாதிக்கப்பட்டு மரணிப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்த சூழ்நிலையில் இந்த போக்கு வரத்து தடை அவசியமானதோர் நடவடிக்கையாகவே அமைந்தது. மாகாணங்களுக்கு இடையிலான போக்கு வரத்தைக் கட்டுப்படுத்தி, கொரோனா தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட மாகாணங்களை அடையாளப்படுத்தி, நோயாளிகளுக்கு சிகிச்சை முறைகளை அதிகரிப்பதும், அம்மாகாணத்தில் தடுப் பூசி வழங்கலை துரிதப்படுத்துவதும் கொரோனா பரவலை கட்டுப்படுத்த உதவும்.

அவ்வாறானதோர் கட்டுப்பாட்டு நிலை இன்னும் வரவில்லை. இந்நிலையில் இப்போது நாட்டை முழுவதுமாக திறப்பது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. இது எந்தளவு சாத்தியம் என்பது தெரிய வில்லை. கொரோனாவிற்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் நாடு முழுவதும் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது.

கடந்த 30ஆம் திகதி ஒரே நாளில் 513,820 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒரே நாளில் இலங்கையில் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமானோருக்கு தடுப் பூசி செலுத்தப்பட்டமைக்கு உலக சுகாதார ஸ்தாபனம் வாழ்த்து தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், கொரோனா பரவல் நிலை இன்னும் கட்டுப்பாட்டிற்குள் வரவில்லை. கடந்த மாதங்களில் ஒரே நாளில் மூவாயிரம் வரையிலான கொரோனா தொற்றாளர் கள் நாட்டில் பதிவானார்கள், பின்னர், நாளாந்தம் அடையாளம் காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கை 1,500இற்குள் பதிவானது. மீண்டும் தற்போதைய நாட்களில் நாளாந்த தொற்றாளர் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. தொற்றாளர் தொகை அதிகரிப்பதற்கு அப்பால், நாளாந்தம் கொரோனாவால் மரணிப்போர் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகின்றது.



அண்மைய பதிவுகளின் படி, ஒரே நாளில் 60இற்கும் மேற்பட்ட கொரோனா நோயாளி கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் உயிரிழப்புகள் நாள்தோறும் அதிகரித்தே செல்கின்றது. தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களே இவ்வாறு மரணிப்பதாக அரசாங்க சுகாதாரத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். எனினும், தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகும் செய்திகளும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

கொரோனா தடுப்பூசியின் இரண்டு 'டோஸ்' செலுத்திக் கொண்டவர்களும் கொரோனா தொற்றாளர்களாக அடை யாளம் காணப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் சுமார் 300 பொலிஸார் இரண்டு தடுப்பூசிகளை செலுத்திக்கொண்ட பின்னரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகின.

இரண்டு தடுப்பூசிகளை செலுத்திக் கொண்ட விசேட வைத்திய நிபுணர் ஒருவருக்கும் இவ்வாறு தொற்று அடை யாளம் காணப்பட்டுள்ளது. மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதி பணிப்பாளர் ஜயருவன் பண்டாரவிற்கே இவ்வாறு தொற்று ஏற்பட்டுள்ளது. அவர், தற்போது தனது வீட்டிலேயே தங்கி யிருந்து சிகிச்சைப்பெற்று வருகின்றார். அவர் முதலாவது தடுப்பூசியாக அஸ்ட்ரா செனெகாவும் இரண்டாவதாக பைஸர் தடுப்பூசியையும் அவர் செலுத்திக் கொண்டுள்ளார். இவ்வாறு, இரு வகை தடுப்பூசிகளை செலுத்திக் கொள்வதில் சிக்கல் உள்ளதா என்பது தொடர்பிலும் தற்போது சிந்திக்க வேண்டியுள்ளது.

நாடு முழுவதும் பொதுமக்களுக்கு தடுப் பூசி வழங்கும் நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்து வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு தடுப்பூசி மருந்துகள் வந்த வண்ணமே உள்ளன. இவ்வருட இறுதிக்குள் நாட்டு சனத்தொகையில் 15 மில்லியன் பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுவிடும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நாட்டு மக்கள் அனைவரும் கட்டாயமாக கொரோனா தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளாதவர்கள் தொடர்பான தகவல்களை மாவட்டங்கள், கிராமங்கள் தோறுமிருந்து அறிவதற்கான பொறிமுறைகளையும் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

தடுப்பூசி பெற்றுக்கொண்ட ஆவணத்தை காண்பிக்காமல் பொதுப்போக்குவரத்தில் பயணம் செய்வதோ, அரச அலுவலங் களுக்கு செல்வதோ தடைசெய்யப்படும் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டிற்கு தடுப்பூசி மருந்துகள் வந்துகொண்டிருக்கும் நிலையில்- தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளும் துரிதப்படுத் தப்பட்டு வரும் நிலையில்- தற்போதிருக் கும் கட்டுப்பாடுகளை நீக்காமல் இன்னும் சில நாட்களுக்கு இந்த கட்டுப்பாடுகளை வைத்திருக்கலாம் என்பது மருத்துவ நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை நாட்டை முழுமையாக திறக்கும் முடிவில் மாற்றங்கள் ஏற்படலாம் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நாட்டை மீண்டும் திறக்கும் முடிவை எடுத்தபோது இருந்த அதே சூழ்நிலை தற்போது இல்லை என்றும், கடந்த வாரத்திலேயே நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும், நிலவும் அபாயகரமான சூழ்நிலையில், முடிவுகள் கவனமாக எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இன்னும் சில நாட்களுக்கேனும் மாகாணங்களுக்கு இடையிலான போக்கு வரத்து தடையை நீடிப்பதும், அந்நாட் களில் ஏற்படும் மாற்றங்களை அவ தானித்து தடைகளை நீக்கும் தீர் மானத்தை மேற்கொள்வதுமே சரியானதாக இருக்கும்.

அதேவேளை, தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்கள் தொடர்ந்தும் முகக் கவசங்களை அணிதல், சமூக இடைவெளி களை கடைப்பிடித்து நடத்தல் என்பதும் கட்டாயமானதாகும். அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளில் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் முகக்கவசம் அணி தேவை யில்லை என்று அறிவிக்கப்பட்டது. இதனால், அங்கு சுகாதார வழிமுறைகள் தளர்த்தப்பட்டன. இதனையடுத்து மீண்டும் அந்த நாடுகளில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இப்போது அந்நாடுகளில் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொருளாதார பலம் குறைந்த இலங்கை போன்ற நாடுகள் இதனை முன்னுதாரண மாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)



# கோலாகலமாக...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கோவிட்-19 தொற்று நோய்ப் பரவல் காலத்தில் ஒலிம்பிக்கில் பங்குபற்ற இருந்த விளையாட்டு வீரர்கள் தங்களது பயிற்சி வசதிளைப்பெறப் பட்டசிரமங்கள்



முதல் தகுதிகாண் நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டதுவரை அவர்கள் எதிர் கொண்ட சவால்களை நினைவு கூர்ந்தார். அவர் இவ் அறிக்கையில், "இவ்வாறான பல சவால்களை தமது விளையாட்டு வீரர்கள் எதிர்கொண்ட போதிலும் அவற்றை எல்லாம் தாண்டி அவர்கள் ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பங்குபற்றுவது அவர்களின் விடாமுயற்சி, பொறுமை, தைரியம் மற்றும் உறுதியை எடுத்துக் காட்டுகிறது. நாங்கள் கடினமாக உழைத்தால் ஒழுக்கமாக இருந்து நம்முடைய மிகவும் சிறந்த முயற்சியைக் கொடுத்தால், துன்ப காலங்களில் கூட நமது கனவுகளை நனவாக்க முடியும் என்பதை இவை நமக்கு நினைவூட்டுகின்றன. எங்கள் நாட்டுக்கான பெருமை மிக்க தூதர்களாக இருப்பதற்கும், எங்கள் எல்லோருக்கும் குறிப்பாக எமது இளையோருக்கு நிகரற்ற உத்வேகம் அளித்தமைக்கும் எமது கனடிய விளையாட்டு வீரர்களுக்கு மிகவும் நன்றி" என்று தெரிவித்தார்.

யூலை 23இல் நடைபெற்ற ஒலிம்பிக் நிகழ்வின் ஆரம்ப விழாவின் கருப்பொருளாக (theme) "முன் நோக்கி நகர்வோம்" (moving forward) இருந்தது. உலகில் பெரும் பகுதியை இன்னும் பிடித்திருக்கும் உலகளாவிய தொற்று நோயால் கடந்த ஒன்றரை வருடங்களாகப் பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி நகர்வதை பிரதிபலிக்கும் முகமாகவே இக்கருப்பொருள் ஒலிம்பிக் ஆரம்ப விழாவிற்குத் தெரிவு செய்யப்பட்டது.

சிறிய வானவேடிக்கை நிகழ்வின் பின்னர் ஜப்பானிய குத்துச்சண்டை வீரரும் தாதியுமான Tsubata நடைப் பயிற்சி செய்யும் சாதனத்துடன் (tread mill) சென்றது கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலின்போது சுயநலமில்லாது அயராது உழைத்த முன்னணி சுகாதாரசேவைப் பணியாளர்களுக்கு மரியாதையும் நன்றியும் செலுத்துவதுடன் உலகெங்கிலுமுள்ள விளையாட்டு வீரர்கள் தொற்று நோய்ப் பரவல் காரணமாக தனிமையில் பயிற்சி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதை பிரதிபலிப்பதாகவும் இருந்தது.



இந்நிகழ்வின் தலைப்பு "உணர்ச்சியால் ஒன்றுபடுவோம்" (United by emotion) என இருந்தது. இது தொற்றுநோய்ப் பரவலால் அரங்கிற்கு வராமல் தடுக்கப்பட்ட பார்வையாளர்கள் தங்கள் இடங்களில் இருந்து கொண்டே ஒலிம்பிக் நிகழ்வுகளைப் பார்த்து விளையாட்டு வீரர்களின் உணர்வுகளை உணர்ந்து அவர்களை உற்சாகப்படுத்துவதன்மூலம் அவர்களுடன் ஒன்றிணைய முடியும் என்பதைக் குறிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டது.

பின்னர் ஆரம்ப விழாவில் கோவிட்-19 தொற்றுநோயால் உயிரிழந்தவர்களையும், 1972இல் நடைபெற்ற மியூனிக் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் கொல்லப்பட்ட இஸ்ரேலிய குழுவின் உறுப்பினர்களையும் நினைவு கூருவதற்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

விளையாட்டு வீரர்கள் அரங்கத்தினுள் அணிவகுத்து வந்தபின்னர் ஒலிம்பிக்கின் முழக்கமான (slogan) "வேகமான, உயர்ந்த, வலுவான, ஒன்றிணைந்த" என்ற சொற்கள் ஆங்கிலத்தில் அரங்கத்தின் தரையில் பிரதிபலிக்கச் செய்யப்பட்டது. ஒரு பெரும் தொற்று நோய்ப் பரவலின் பின்னர் உலகம் ஒன்றிணைவதால் இந்த "ஒன்றிணைந்த" என்ற சொல் ஒலிம்பிக் முழக்கத்தில் இம்முறை புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஒலிம்பிக்கின் இம்முறைக்குரிய "ரோக்கியோ 2020"இன் சின்னம் ஒலிம்பிக்கின் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெறும் அரங்கின்மீது வானவெளியில் 1,800க்கும் மேற்பட்ட drones உடன் வண்ணமயமாக வெளிச்சங்களுடன் தோன்றியது ஆரம்ப நிகழ்வுகளின்போது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஜப்பான் சார்பில் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் அமெரிக்காவில் பயிற்றப்பட்ட உலகின் முதல்தரமான Tennis Player ஆன Nayomi Osaka ஒலிம்பிக் தீக்கிண்ணத்தை (cauldron) தான் கொண்டுவந்த தீப்பந்தத்தின் மூலம் பற்ற வைத்தார். காபன் வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைக்கும் முயற்சியாக ஒகஸ்ற் 8ஆம் திகதிவரை தொடர்ந்து எரியும் இந்த ஒலிம்பிக் கிண்ணத்தை இம்முறை முதன்



முறையாக ஐதரசன் எரிபொருள் பாவிக்கப் பட்டு எரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கனடாவின் முதலாவது பதக்கமாக ரோக்கியோ 2020 ஒலிம்பிக்கில் 4x100 மீற்றர் நீச்சலில் (free style relay) பங்குபற்றிய பெண்கள் குழுவான Margaret MacNeil, Rebecca Smit, Kayla Sanchez மற்றும் Penney Oleksiak இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றதுடன் ஆரம்பித்து வைத்தனர்.

பின்னர் Margaret MacNeil தான்



கனடாவிற்கான முதலாவது தங்கப் பதக்கத்தையும் பெண்களுக்கான 100 மீற்றர் Butterfly நீச்சல் போட்டியில் முதலாவதாக வந்து பெற்றுக் கொடுத்தார்.

# தமிழ் சமூக மையம்

உள்ளூர் சமூக ஆர்வலர்கள் பலர் தசாப்தங்களாக அர்ப்பணிப்புடன் பணியாற்றியதன் விளைவாக ரொறொன்ரோவில் தமிழ் சமூக மையத்தை (Tamil Community Centre -TCC) நிர்மாணிப்பதற்கு 14.3 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்குவதாக கனடிய மத்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.


கனடா உள்கட்டமைப்பு திட்டத்தில் (Investing in Canada Infrastructure Program -ICIP) மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, கனடிய மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்கள் சமூக மையத்தைத் தொடங்கத் தேவையான $26.3 மில்லியனை வழங்க ஒப்புக் கொண்டது. வரிகள் உட்பட தமிழ் சமூக மையம் கட்டுவதற்கான நிதி ஏறக்குறைய $40 மில்லியன் தேவைப்படும்மென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசிடம் இருந்து சுமார் $14.3 மில்லியனும், மாகாண அரசிடமிருந்து $11.9 மில்லியனும் மற்றும் சமூகத்திலிருந்து $9.6 மில்லியனும் திரட்டப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஏற்கனவே தமிழ்ச் சமூக ஆவலர்கள் $11.2 மில்லியன் தருவதற்கு ஒப்புக்கொண்டுள்ளனர். ரொறொன்ரோ மாநகர் ஏற்கனவே $25 மில்லியன் மதிப்புள்ள நிலத்தை நீண்ட கால குத்தகைக்கு தமிழ் சமூக மையம் போன்ற சமூக திட்டத்திற்கு உதவுவதற்காக வருடத்திற்கு $1இற்கு அதற்குரிய வரியுடன் வழங்கியுள்ளது.

கலாச்சார நிகழ்ச்சிகள், மன்றங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றை நடத்தக் கூடிய ஒரு கலையரங்கம் (auditorium for cultural performances /forums / seminars), ஒரு உட்புற உடற்பயிற்சி




கூடம் (indoor gymnasium), மனநல சேவைகள் (mental health services), வரலாறு மற்றும் காப்பக இடம், அருங்காட்சியகம் (history and archival space/museum), ஒரு நூலகம் (library), பன்மொழிச் சேவைகள் (language services), சந்திப்பு அறைகள் (meeting rooms), பொழுதுபோக்கு/கல்வி பயிலும் இடங்கள் (recreational/ educational space), பெண்களுக்கான சேவைகள் (women's services) மற்றும் இயலாமை நிரலாக்கத்திற்கான ஓர் அரங்கம் (disability programming) ஆகியவை இச்சமூக மையத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# சார்பட்டா பரம்பரை திரை விமர்சனம்

## கண்ணன்

ஒரு சாதாரண மனிதன் எப்படி சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உந்தப்பட்டு, பல்வேறு சோதனைகளைக் கடந்து, உயர்ந்த மனிதனாக, தலைமாந்தனாக ஆகிறான் என்பதை சுவையாகச் சொல்லும் படம், 'சார்பட்டா பரம்பரை'. 1975 காலகட்டத்தில், வடசென்னையில் சார்பட்டா பரம்பரை - இடியப்ப பரம்பரை என்ற இரண்டு 'ரோசமான ஆங்கில குத்துச் சண்டை' குழுக்களிடையே நிலவிய பகைமைதான் திரைக்கதையின் அடிப்படை.

வடசென்னை பகுதியில் பிரிட்டிஷார் அறிமுகம் செய்த குத்துச் சண்டை விளையாட்டு, ஆரம்பத்தில் ஆங்கிலேயருக்கும் தமிழருக்கும் இடையேயான போட்டியாகப் பிரபலமாகிறது. ஆங்கிலேயருடன் மோதுபவர்கள் சார்பட்டா பரம்பரை. ஒரே குழுவாக குத்துச் சண்டையில் ஈடுபட்டு வந்த சார்பட்டா பரம்பரையினர் ஆங்கிலேயர் சென்ற பின்னர் சார்பட்டா பரம்பரை, இடியப்ப நாயக்கர் பரம்பரை, எல்லப்ப செட்டியார் பரம்பரை, கரிய பாபுபாய் பரம்பரை என்று பல்வேறு குழுக்களாகப் பிரிந்து மோதுகின்றனர். ஆனால், இந்தக் குத்துச் சண்டையில் சார்பட்டா பரம்பரையை சார்ந்தோர்தான் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

ஒரு கட்டத்தில் இடியப்ப நாயக்கர் பரம்பரையில் இருக்கும் வேம்புலியை யாராலும் வெல்ல முடியாமல் இருக்கிறது. அவருடன் மோதும் சார்பட்டா பரம்பரை வீரர் தோல்வியடையும் நிலையில் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகும் மூத்த பயிற்சியாளர் ரங்கன் வாத்தியார், அடுத்த போட்டியில் வேம்புலியை எதிர்த்து வெற்றிபெறுவோம் தோல்வியடைந்தால் குத்துச்சண்டை போட்டியிலிருந்தே விலகிக் கொள்கிறோம் என்று சவால் விடுகிறார்.



களத்தில் சவால் விட்டுவிட்டு வந்தாலும், வேம்புலியை எதிர்க்கத் தன் குழுவில் ஒருவரை ரங்கன் வாத்தியாரால் தேர்வு செய்யமுடியவில்லை. இந்நிலையில், அவரது சவாலை ஏற்றுக்கொண்டு களத்தில் இறங்குகிறார், சாதாரண கூலித் தொழிலாளியான கபிலன். அவர் சார்பட்டா பரம்பரையின் கௌரவத்தைக் காப்பாற்றினாரா என்பதும், இரு குழுக் களிடையிலான இப்பந்தயத்தில் இறுதிப் போட்டியில் கலந்துகொள்வதற்கு முன்பாக கபிலன் யாரையெல்லாம் வெற்றிபெற வேண்டியிருக்கிறது என்பதே மீதி படம்.

கபிலனாக வருகிறார் ஆர்யா. 'நான் கடவுள்' திரைப்படத்துக்குப் பிறகு சவாலான பாத்திரம் மீண்டும் ஒரு சிறந்த இயக்குநரிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டிருக்கிறார். முதலில் இயலாமை, அதேநேரம் தனது சார்பட்டா பரம்பரை - குறிப்பாக வாத்தியார் மீது கொண்ட அக்கறை, அதனால் உருவாகும் பெருமிதமும் கோபமும், அதன் பிறகான வீழ்ச்சியும் எழுச்சியும் சண்டையும் என்று ஆர்யாவின் உடல்மொழி படம் முழுக்க உருமாறிக்கொண்டே இருக்கிறது.



தமிழ்த் திரைப்படங்களில் பொதுவாக கதாநாயகன் - வில்லன் என்ற இரண்டு பாத்திரங்களைத் தவிர்த்து மற்றைய பாத்திரங்கள் எந்த முகமுமின்றி, கதா நாயகன் அல்லது வில்லனின் துணைப் பாத்திரங்களாகவே வந்து போவார்கள். ஆனால், இந்தப் படத்தில் மாரியம்மாள், ரங்கன் வாத்தியார், பாக்கியம், வெற்றிச் செல்வன், டாடி, ராமன், டான்சிங் ரோஸ், வேம்புலி, தணிகை என ஒவ்வொரு பாத்திரமும் ஏதோ ஒரு காட்சியில் கதா நாயகனாகவோ வில்லனாகவோ மிளிர் கின்றனர். ஒவ்வொருவருக்கும் கதையில் ஒரு தருணம் இருக்கிறது.

கபிலனின் மனைவி மாரியம்மாளாக வரும் துஷாரா விஜயனுக்கு ஒரு சிறப்பான அறிமுகம் இந்தப் படம்.

'வாத்தியார்' ரங்கன் பாத்திரத்தை சிறப் பாகவும் கச்சிதமாகவும் கையாண்டுள்ளார் பசுபதி. அவர் ஒரு நாடக நடிகர் என்பது சம்பந்தப்பட்ட ஒவ்வொரு காட்சியிலும் வெளிப்படுகிறது. தன்னுடைய பரம்பரை தோற்றுவிடக்கூடாது என்று அவர் கொள்கிற தவிப்பு, ஆவேசம், கோபம், நிதானம் என்கிற கலவையான உணர்ச்சியைப் படம் பூராவும் தக்க வைத்துக் கொண்டிருப்பதில் வெற்றி பெற்றிருக்கிறார்.

டான்சிங் ரோஸ் என்று இடியப்பன் பரம்பரையிலிருந்து ஆர்யாவுடன் மோதும் நடிகர் சபீரின் காட்சிகள் பிரமாதம். சில காட்சிகளில் மட்டுமே வந்தாலும் படம் முடிந்த பிறகும் மறக்கமுடியாத பாத்திரமாக டான்சிங் ரோஸ் இருக்கிறார். ஆங்கிலமும் தமிழும் கலந்துபேசும் 'டாடி' என்ற ஆங்கிலோ இந்தியன் பாத்திரத்தில் வரும் ஜான் விஜய் பல தருணங்களில் காட்சியில் உள்ள மற்றவர்களைத் தாண்டிப் பிரகாசிக்கிறார்.



இசை: சந்தோஷ் நாராயணன். படத்தின் பாடல்கள் குறைவு என்றாலும் பின்னணி இசையில் சந்தோஷ் நாராயணன் பிரமாதப்படுத்தியுள்ளார். கலை இயக்கு னர் தா. ராமலிங்கம் திறமையும் படத்தை வேறு தளத்திற்கு நகர்த்தியிருக்கிறது. தமிழ் பிரபா வசனங்கள் பல இடங்களில் அசர வைக்கின்றன.

எழுத்து - இயக்கம்: பா. ரஞ்சித். விளையாட்டை மையமாக வைத்து உருவாகும் படங்கள், இயக்குநர்களுக்கு மிகச் சவாலானவை. படம் பார்ப்போருக்கு அந்த விளையாட்டு அறிமுகமில்லா விட்டால், ஆர்வமில்லாமல் போகக்கூடும். ஆனால், முதல் காட்சியிலேயே அந்த சவாலை கடந்துவிடுகிறார் பா. ரஞ்சித். முதல் பத்து நிமிடங்களுக்குள், ஆங்கில குத்துச்சண்டை 'ரிங்'குக்குள் நம்மையும் அழைத்துச் சென்றுவிடுகிறார்.

ஆரம்பித்து ஐந்து நிமிடங்களிலேயே மிக வேகமாக உச்சக்கட்டத்தை நோக்கி நகர ஆரம்பிக்கிறது திரைக்கதை. அடுத்த ஒரு மணி நேரம் அந்தப் பரபரப்பு குறையாமல் உள்ளது. அதற்குப் பிறகு, சற்று தொய்வைச் சந்திக்கும் திரைக்கதை, அரை மணி நேரத்திற்குப் பிறகு மீண்டும் வேகமெடுத்து, ஓர் அட்டகாசமான உச்சக் கட்ட காட்சியில் நிறைவடைகிறது.


1975 நெருக்கடி நிலை காலப் பின்னணி யில் நடக்கும் கதையில் பல பாத்திரங்கள் அரசியல் சார்புடன் இருக்கின்றன. மஞ்சா கண்ணன் என்று ஒரு பாத்திரம் வருகிறது. அப்படி ஒரு பாத்திரத்தை உருவாக்க, நிச்சயம் துணிச்சல் தேவைப்படும். அந்த துணிச்சல் ரஞ்சித்துக்கு இருக்கிறது.

'ராக்கி' படத்தின் உத்திகள் பலவற்றை எடுத்தாண்டிருக்கிறார். என்றாலும், தற் கால தமிழ் சினிமாவின் பெருமிதங்களில் ஒருவர் தான் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறார், பா. ரஞ்சித்.

'சார்பட்டா பரம்பரை' எல்லோரும் பார்க்கக் கூடிய படம் ரத்தமும் சதையும் உள்ள, அடிபட்டால் காயம் படும் மனிதர்களைப் பற்றிய கதை. ரத்தம் சொட்டச்சொட்ட அடித்துக் கொள்கின்றனர் என்றாலும் இந்தப் படத்தைக் குழந்தைகளோடு பார்க்கலாம். வன்முறையும் ரத்தக்களரியும் குமட்டாது. நிச்சயமாக இந்த ஆண்டின் சிறந்த தமிழ் திரைப்படங்களில் ஒன்றாக இருக்கும்.

சமகால தமிழ் சினிமாவின் பெருமைமிகு அடையாளம் _ 'அமேசான் ப்ரைம்' தளத்தில் வெளியாகியுள்ளது.

## அவலக்குரல் கேட்கலையா!



பொருள்தேடும் நோக்கத்தில் புதைகுழிகள் தோண்டுகிறார்
வருவாயை மனமிருத்தி மாயம்பல செய்கின்றார்
இரைதேடும் விலங்குகள்போல் இரக்கமதை அழிக்கின்றார்
அளவின்றி ஆசைப்பட்டு அனைத்தையுமே அள்ளுகிறார்!

ஆட்சியிலே அமர்ந்திருப்பார் அறந்தொலைத்து நிற்கின்றார்
அதிகாரம் இருப்பதனால் அலட்சியமாய் நடக்கின்றார்
காவல்செய்யும் துறையினரும் கடமையினை மறக்கின்றார்
காலந்தோறும் மக்களெலாம் கவலையிலே உழலுகின்றார்!


பொதுநோக்கம் எனும்நோக்கை பொசுக்கியே விடுகின்றார்
பூமியின் வளமனைத்தும் காசாக்க விளைகின்றார்
மேடையேறி வாய்கிழிய விதம்விதமாய் பேசுகிறார்
பாதகத்தை மனம்முழுக்க பதுக்கியே வைக்கின்றார்!

சாதிகூறிச் சாதிகூறி தமக்குலாபம் தேடுகிறார்
சமயத்தை பலமாக்கி தன்பக்கம் ஆக்குகின்றார்
நீதிகூட நடக்காமல் கொடுக்கின்றார் பணத்தையெல்லாம்
நிம்மதியை அவர்பெற்று நிம்மதியை அழிக்கின்றார்!

சாமியினை நம்பிநின்று சனங்களெல்லாம் அழுகின்றார்
சாமிவரம் கொடுப்பதிலே தாமதமே ஆகிறது
ஆர்வந்து காத்திடுவார் என்றுமக்கள் நோக்குகிறார்
ஆண்டவனே மக்களது அவலக்குரல் கேட்கலையா!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

கோவிட்-19 தடுப்பூசி நடவடிக்கை

# நாம் அனைவரும் கோவிட்-19 தடுப்பூசியைப் பற்றி மேலும் அறிய விரும்புகின்றோம்



## நான் ஏன் தடுப்பூசி போட வேண்டும்?

இது கோவிட்-19 இலிருந்து பாதுகாக்கிறது மேலும் நீங்கள் நோய்வாய்ப்படுவதைத் தவிர்க்க உதவுகிறது. பலர் சிகிச்சைப் பெறாமல் குணமடைந்தாலும், சிலர் கோவிட்-19 ஆல் இறக்க நேரிடலாம் அல்லது இதய நோய் அல்லது நிமோனியா போன்ற நுரையீரல் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடலாம். நரம்பு மண்டலம் கூட பாதிக்கப்படலாம்

## நம்மைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வோம்!

வரவிருக்கும் மாதங்களில், பெரும்பான்மையான மக்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாத வரையில், கோவிட்-19 நீடித்து இருக்கும்.




உங்கள் இடைவெளியை கடைபிடியுங்கள்



உங்கள் முகத்தை மறைக்கவும்



உங்கள் சட்டையின் கைகளில் இருமவும்



கைகளை கழுவவும்

Québec.ca/vaccinCOVID

1 877 644-4545

20-279-31FA

Votre gouvernement

Québec

# நாமும் நமது இல்லமும் 588

## கனடாவில் முதற் தடவை ஆதனம் வாங்குவோருக்குரிய சலுகைகள்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

முதற் தடவையாக ஆதனம் வாங்கும் போது ஏற்படும் செலவுகள் நாம் எதிர் பார்த்ததைவிட அதிகமாகவே இருக்கும்.

1. ஆரம்ப முதலீடு - Down Payment
2. சட்ட ஆலோசனைகளிற்கான செலவு -Legal Fee
3. அரச வரிகள் -Government Tax
4. இடமாற்றச் செலவு - Moving expenses
5. வாங்கப் போகும் வீட்டைப் பரிசோதனை செய்வதற்கான செலவு - Home Inspection.

இவற்றையும் கருத்தில் கொண்டு செலவுகளைக் கணக்கிடுதல் வேண்டும்.

முதற் தடவையாக ஆதனம் வாங்கும் கனடியர்களை ஊக்குவிப்பதற்காக மூன்று நிலை அரசுகளும் (Federa, Provincial and Municipal) பல சலுகைகளை வழங்கு கின்றன. இதனால் சில செலவுகள் தவிர்க்கப்படும் அல்லது குறைக்கப்படும். இவற்றில் ஐந்து முக்கியமான சலுகைகள்:

1. ஆதனம் வாங்குவோருக்கான திட்டம் The Home Buyers Plan (HBP):

மத்திய அரசு (Ferderal government)இன் கனடிய வருமானவரி நிறுவனத்திடமிருந்து (Canada Revenue Agency- CRA), வட்டியில்லாக் கடனாக உங்கள் பதிவு செய்யப்பட்ட ஓய்வூதியச் சேமிப்புத் திட்டத்திலிருந்து (RRSP), தனி நபராயின் $35,000வரையும், கணவனும் மனைவியும் சேர்ந்து மொத்தமாக $70,000 வரையும் எடுக்கக்கூடிய வசதி உள்ளது. இவ்வாறு பெறும் பணத்தில் வாங்கும் ஆதனத்தில் நீங்கள் குறைந்தது ஒரு வருடமாவது வசிக்க வேண்டும். RRSPஇல் இருந்து பெறப்படும் இந்தத் தொகையை எதிர் வரும் 15 வருடங்களில் மீளச் செலுத்த வேண்டும். ஆதனம் வாங்குவோரை ஊக்குவிப்பதற்காக இச்சலுகை வழங்கப் படுகின்றது. உங்களுக்கு ஏற்கனவே சலுகையாக வழங்கப்பட்ட வருமான வரிப் பணத்தை எதிர்வரும் 15 வருடங்களில் திரும்பச் செலுத்தாவிட்டால், அதற்குரிய வருமான வரி, அந்தந்த வருடங்களில் செலுத்த வேண்டும்.

2. புதிய ஆதனம் வாங்குவோருக்கான HST/GST வரித் தள்ளுபடி (HST/GST New Housing Rebate.):

புதிதாக நிர்மாணம் செய்யப்படும் ஆதனம் வாங்கும்போது நீங்கள் செலுத்தும் HST/ GST வரிகளின் ஒரு பகுதியை மீளப் பெறலாம். இவ்வரிச் சலுகை பெறு வதற்குப் புதிதாக நிர்மாணம் செய்யப்படும் ஆதனம் கையில் பெறும்போது அதன் பெறுமதிக்கு $450,000இற்குக் குறை வாகவும், நீங்கள் முதற் தடவை ஆதனம் வாங்குபவராகவும் இந்த ஆதனத்தில் குடியிருப்பவராகவும் இருக்க வேண்டும்.

| Region | Ontario | Toronto |
|---|---|---|
| Maximum rebate | $4,000 | $4,475 |
| Rebate will cover LTT to a maximum home value of | $368,000 | $400,000 |
| Partial refund available? | 50% refund if spouse does not qualify | 50% refund if spouse does not qualify |

Mobile homes / Floating homes மற்றும் ஆகக்குறைந்தது 20 வருடங்களிற்குக் குத்தகைக்குப் பெறப்பட்ட நிலம் (leased land) ஆகியவற்றிற்கும் இந்த வரிச் சலுகை வழங்கப்படும்.

3. ஆதனம் வாங்குவோருக்கான வரிச் சலுகை -The First Time Home Buyers Tax credit -


$5,000 வரை வரிச் சலுகை பெற நீங்கள் முதற் தடவை ஆதனம் வாங்குபவராகவும், இந்த ஆதனத்தில் குடியிருப்பவராகவும் இருக்க வேண்டும். கணவன் மனைவி யாக வாங்குவதாக இருந்தால் மொத் தமாக $5,000 இற்கு மட்டுமே இந்த வரிச் சலுகை வழங்கப்படும்.

4. ஆதன மாற்று வரித் தள்ளுபடி Land Transfer Tax Rebate.

ஒன்ராறியோவில் $4,000வரையும், பிரிட்டிஸ் கொலம்பியாவில் $8,000வரை யும் மற்றும் பிரின்ஸ் எட்வேட் ஐலண்ட்இல் $2,000வரையும் ஆகக் கூடிய ஆதன மாற்று வரிக் கழிவு பெறலாம். ரொறொன்ரோ நகர எல்லைக்குள் முதற் தடவையாக ஆதனம் வாங்குபவர்கள் ஒன்ராறியோ மாகாணத்தால் வழங்கப்படும் $4,000 பெறலாம். ரொறொன்ரோவில் $4,475 வரை ஆதன மாற்று வரி தள்ளுபடியை பெறலாம். ரொறொன்ரோ வில் இரு வரி இருப்பதால், இரண்டு மடங்கு வரை தள்ளுபடியை பெறலாம். இவ் வரிதள்ளுபடியை பெறுவ தற்கு வாங்கிய ஆதனத்தில் ஒன்பது மாதங்களுக்குள் குடியேற வேண்டும்.

5. First Time Home Buyers Incentive

CMHC (Canadian Mortgage and Housing Corporation) நிறுவனம் 5% அல்லது 10 % ஆரம்ப முதலீட்டை முதற் தடவை ஆதனம் வாங்குவோருக்குக் கடனாக வழங்குகிறது. இதனால் ஆதனம் வாங்கு பவரிற்கு ஆதன முதலீடு இலகுவாகும். அத்துடன் மாதாந்த கொடுப்பனவில் இறக்கமும் ஏற்படும். ஆனால் இவ்வாறு வாங்கும் ஆதனத்தை 25 வருடத்திற்குள் விற்க வேண்டும். விற்றபின் ஆரம்பத்தில் பெற்ற கடனைத் திரும்பச் செலுத்துவது டன், விற்பதால் ஏற்படும் ஆதாயத்தில் 5% அல்லது 10% வரையிலான தொகையை CMHCஇற்குக் கொடுத்தல் வேண்டும். மேலும் இக்கடனைப் பெறுவதற்கு ஆதனம் வாங்குபவரின் வருட வருமானம் $120,000இற்குக் குறைவாகவும் வாங்கும் ஆதினத்தின் விலை $480,000இற்குக் குறைவாகவும் இருத்தல் வேண்டும்.




# நாட்டை...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

இலங்கையில் உள்ள மக்கள் இரண்டு 'டோஸ்' தடுப்பூசி பெற்றுக்கொண்ட பிறகும் முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளிகளை கடைப்பிடிப்பது என்பது கட்டாய நடைமுறைகளாக்கப்படல் வேண்டும்.

அரசாங்கம் கூறுகின்ற அறிவுறுத்தல் களுக்கு அப்பால், பொதுமக்கள் சுய மாகவே கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதையே மேலும் மேலும்



அழுத்திக் குறிப்பிட வேண்டியுள்ளது.



# திருமுருகன் காந்தி நேர்காணல்

**நேர்கண்டவர்: கண்ணன்**

‘பெகாசஸ்’ மென்பொருள் உளவு விவகாரம் இந்திய அரசியலை உலுக்கி வருகிறது. இந்தியாவில் ‘பெகாசஸ்“ செயலி மூலம் வேவு பார்க்கப்பட்ட 300 நபர்கள் பட்டியலில், தமிழ்நாட்டைச் சேர்ந்த, மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி பெயரும் இடம் பெற்றுள்ளது. தமிழீழ இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை, ஸ்டர்லைட் ஆலை எதிர்ப்பு, கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு போன்ற பல்வேறு போராட்டங்களை தமிழ்நாட்டில் மே 17 இயக்கம் முன்னெடுத்து நடத்தியது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், திருமுருகன் காந்தியை சந்தித்தோம்.

**இந்தியாவில் பெகாசஸ் செயலி மூலம் உளவு பார்க்கப்பட்டோர் பட்டியலில் உங்கள் பெயரும் இடம்பெற்றுள்ளதே?**

பாஜகவின் இந்துத்துவ கொள்கைகளையும் பொருளாதாரக் கொள்கைகளையும் தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி வந்தோம். இதனாலேயே எனது கை பேசியை ஒட்டுக் கேட்கின்றனர். இந்திரா காந்தியின் ‘நெருக்கடி நிலை’யை எதிர்த்த பாஜக இப்போது அறிவிக்காமலேயே அதுபோன்ற செயல்களில் ஈடுபடுகிறது. இந்த செயலி மூலம் உளவு பார்ப்பது மட்டுமல்ல நமது அனுமதி இல்லாமலேயே நம் கைபேசியை பயன்படுத்தி வீடியோ, ஆடியோ எடுக்க முடியும் ஓர் ஆவணத்தை நமது கை பேசிக்குள் திணிக்க முடியும். அது அரசியல் சாசனத்துக்கு எதிரானது. மக்களுக்காக உழைப்போரை உளவு பார்த்து அச்சுறுத்த நினைக்கின்றனர்.



இந்திய ஒன்றியத்தின் மைய நீரோட்டத்தில் இயங்கும் ஊடகங்களை, இன்றைக்கு கிட்டத்தட்ட முழுமையாக, நேரடியாகவும் மறைமுகமாகவும் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது மோடி அரசு. ஊடகத்துறையின் முக்கிய முதலீட்டாளர்களான அம்பானி - அதானிகள் மூலம் இதனை மிகவும் எளிமையாக செய்து முடித்திருக்கிறது. இதனால், தற்போது மக்கள் தங்களது கருத்துக்களை பிரதிபலிக்கும் வெளியாக, ஊடகமாக சமூக வலைத்தளங்களையே கருதுகின்றனர். தற்போது இதனையும் மொத்தமாக தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர எத்தனிக்கிறது மோடி அரசு.

மோடி அரசின் உழவர் விரோத மூன்று வேளாண் சட்டங்களை திரும்பப் பெறக்கோரி டெல்லியை முற்றுகையிடும் விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவாக பிப்ரவரி 1 அன்று பரப்பப்பட்ட சில ஹேஷ்டேக்குகளையும் கிட்டத்தட்ட 1,200 சமூக செயற்பாட்டாளர்களின் டிவிட்டர் கணக்குகளையும் பதிவுகளையும் அகற்றுமாறு அந்நிறுவனத்திற்கு மோடி அரசு அழுத்தம் கொடுத்தது. அதற்கு இணங்காத டிவிட்டர் நிறுவனத்தை இந்திய ஒன்றியத்தில் தடை செய்வோம் என மிரட்டியதும் குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக மோடி அரசிற்கு எதிராக கருத்துக்களை கூறும் நபர்களின் கணக்குகள் முடக்கப்பட்டது. அதில் எனது டிவிட்டர் கணக்கும் ஒன்று.


அரச பயங்கரவாதத்திற்கு எதிரான மக்கள் எழுச்சி போராட்டங்களை தடுக்க, அரச பயங்கரவாதத்தை மறைக்க இணைய முடக்கத்தையும் சமூக ஊடகங்களில் இடப்படும் பதிவுகளை நீக்குவதையும் ஓர் ஆயுதமாக இந்திய ஒன்றிய அரசு பயன்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாகத் தான் சமூக வலைதளங்களுக்கென புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய விதிமுறைகளின்படி ஒவ்வொரு பயனர்களின் தரவுகளும் கண்காணிக்கப்படும்.

ஏற்கனவே, முகநூலில் அரசுக்கு எதிராகப் பதிவிடப்படும் பதிவுகள், அரசை விமர்சிக்கும் தனிநபர்களுடைய கணக்குகள், தமிழீழ இனப்படுகொலை தொடர்பான பதிவுகள் தொடர்ந்து முடக்கப்பட்டு வருகின்றன. இக்காரணத்தால் மே 17 இயக்கத்தின் முகநூல் பக்கம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. திருமுருகன் காந்தி என்னும் பெயரில் தனிப்பட்ட கணக்கு உருவாக்கிக்கொள்ள முடியாத சூழலை ஏற்படுத்தியுள்ளது. இதே நிலைதான் யூடியூபிலும் தொடர்கிறது. பல்லாண்டுகளாக வெளியிடப்பட்ட முக்கிய காணொளிகள் கொண்ட மே 17 இயக்கத்தின் சேனலும் முடக்கப்பட்டது. ஆனால், நாங்கள் அஞ்சப்போவதில்லை. அரசை அம்பலப்படுத்தும் எங்கள் பணிகள் தொடரும்.

**2018ஆம் ஆண்டு, சட்டவிரோதச் செயல்பாடுகள் (தடுப்பு) சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 53 நாட்கள் சிறையில் இருந்தீர்கள். நீங்கள் கைது செய்யப்பட்டதற்கான உண்மையான பின்னணிக் காரணம்தான் என்ன?**

ஆந்திராவில் 20 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது, கர்நாடகாவில் நடந்த கலவரம், காவிரி உரிமை, மீனவர் பிரச்சினை, ஈழப் படுகொலையில் இந்திய அரசின் பங்கு என எல்லாவற்றையும் பகிரங்கப்படுத்தினோம். ஆணவப் படுகொலை போன்றவற்றை ஐ.நா. மனித உரிமைக் கழகத்தில் ஆவணப்படுத்தினோம். இதனால், எங்கள் மீது ஒன்றிய பாஜக அரசுக்கு மிகுந்த கோபம்.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)



# எழுத்தாளர் சுந்தரம் இந்திரராஜா

## நினைவுப்பகிர்வு




விளம்பரம் பத்திரிகையில் மிக நீண்ட காலமாக அறிவியல் கட்டுரைகளை எழுதி வந்த சுந்தரம் இந்திரராஜா யூலை 08, 2021 அன்று காலமானார். இவர் உரும்பிராயைச் சேர்ந்தவர். சுந்தரம் தங்கப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வராவார். இவருக்கு காலஞ்சென்ற யோகானந்தா, நகுலாதேவி (பிரித்தானியா), குமாரதாஸ் (கனடா), ரவி (சிவிஸ்), செல்வா (கனடா), வசுந்திராதேவி (இலங்கை), சுகுமார் (சுவிஸ்) சுபத்திராதேவி ஆகியோர் சகோதரர்களாவர்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையிலும் இந்துக் கல்லூரி யிலும் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட இவர், வகுப்பில் சிறந்த மாணவராக விளங்கினார். படிக்கும் காலத்திலேயே மிகவும் தைரியமும் அறிவும் உள்ளவராகத் திகழ்ந்து பல மாணவ நண்பர்களை பெற்றிருந்தார். ஆசிரியர்களும் அவரை மிகவும் விரும்பினர். கல்வியில் மட்டுமன்றி படம் வரை கலையிலும் ஓர் உன்னதமான மாணவராவார். இவரது திறமை காரணமாக வகுப்பு நண்பர்களுக்கும் கணிதம் படம் வரைதல் போன்றவற்றில் பயிற்சி அளித்துள்ளார். இளமைக் காலத்திலேயே சமூக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்.

நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோது 'கலை வளர்ச்சி கழகம்' என்ற பெயரில் ஓர் இலக்கிய மன்றத்தை ஆரம்பித்தோம். கனடாவில் வாழ்கின்ற சிவலோகநாதன், இந்திரதாஸ், பிரித்தானியாவில் வாழ்கின்ற எம்.ரி. செல்வராசா, போன்றோரும் இந்திரராஜாவும் இணைந்து இக்கழகத்தை முன்னெடுத்துச் சென்றோம். தொழில் நுட்பத் துறையில் மிகவும் திறமை படைத்த இவர் அக்காலத்திலேயே எமது நாடகங்களை மேடையேற்றும் போதெல்லாம் அதற்குரிய பெயர் விபரங்களை திரையில் காட்டும் வல்லமை பெற்றிருந்தார். 'அதே இரத்தம்' என்ற நாடகத்தை எமது ஊரைச் சேர்ந்த துரை மனோகரன் எழுதி மேடையேற்றினார். அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இந்நாடகத்தின் வெற்றிக்கு மூலகாரணமாக இருந்தவரும் இந்திரராஜாவே.



அவர் தனது படவரை துறையில் மேற்படிப்பை யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். இதனால் அந்தக் காலத்திலேயே அவரிடம் கல்வி கற்பதற்காக பல மாணவர்கள் வந்து சென்றது எனது நினைவில் இருக்கின்றது. அத்துடன் இவர் இங்கு வாழுகின்ற கலகலப்பு தீசன் தனது இளமைக்காலத்தில் 'கலகலப்பு' என்னும் கையெழுத்துச் சஞ்சிகையை உருவாக்கினார். அவர் எமது அயல் கிராமமான இணுவிலைச் சேர்ந்தவர். தீசனின் சஞ்சிகையை வடிவமைப்பதிலும் இந்திரராஜாவின் பங்களிப்பு அபரிதமானது. தனது இருபதாவது வயதில் புறானே என்ற நாட்டிற்கு தொழில் நிமித்தம் சென்றார். அங்கு அவர் பல வருடங்களாகக் கடமை புரிந்து 90களில் கனடாவில் குடியேறினார். இங்கு IBI Group என்ற நிறுவனத்தில் பொறி யியலாளராகக் கடமை புரிந்தார். இக்கால கட்டத்தில் அவர் ஒவ்வொரு விடுமுறையின் போதும் ஒவ்வொரு நாடுகளுக்கும் தனது மனைவியுடன் சென்று வந்தார். இவர் 50 நாடுகளுக்கு மேல் பிரயாணம் செய்துள்ளார். அவர் சென்ற சில நாடுகளில் ஸ்பெயின், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஸ்கொட்லாந்து, இத்தாலி, சிசிலி, நிக்கராகுவா, மெக்சிகோ, அலாஸ்க்கா, பனாமா, கோஸ்டரீகா, நிக்கறாகுவா என்பவற்றைக் குறிப்பிடலாம். இந்த நாடுகளில் எடுத்த புகைப் படங்களைத் தனது முகநூலில் பதிவிட்டு வந்தார். கனடாவிலும் பல மாகாணங்களுக்கு சென்று வந்துள்ளார். இவரது கட்டுரைகள் நேரடியான அனுபவங்களைப் பகிர்வனவாகவும் அறிவுசார் விடயங்களைக் கொண்டதாகவும் இருந்ததால் இவருக்குப் பல வாசகர்கள் உருவாகினர். பாரதியினுடைய பேசாப் பொருள் பேச வேண்டும் என்பதற்கிணங்க நாம் எதிர் பாராத புதிய தலைப்புக்களை அவர் கையாண்டுள்ளார். உதாரணத்துக்கு தைப்பொங்கலைக் கொண்டாடும் யப்பான், நோய்களை விரட்டும் தங்கப்பழம் கிவி, மதசார்பற்ற தீபாவளி, தேயிலை பிறந்த கதை, பசிபிக் வலையம், ஐரோப்பாவில் தேன்நிலவு, ஹவாய் தீவுகள், புத்துணர்விற்கு யோகா.

இப்படி எண்ணற்ற தலைப்புகளில் எழுதியுள்ளார். 2018இல் தனது முழுநேர தொழிலிலிருந்து ஓய்வு பெற்றார். மார்க்கம் முதியோர் கழகம், யோக் பிராந்திய முதியோர் கழகம் ஆகியவற்றில் செயலி ஊடக பல உரைகளை நிகழ்த்தியும், யோகாப் பயிற்சிகளை செய்து காட்டியும் பல முதியோர்களுக்கு முன்னுதாரணமாக இருந்துள்ளார்.

என்றும் முகமலர்ச்சி கொண்ட இவர் குறுகிய காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்து எம்மைப் பிரிந்து விட்டார். எழுத்தாளர் உலகத்துக்கு இது ஒரு பேரிழப்பாகும். குறிப்பாக 'விளம்பரம்' பத்திரிகை ஒரு சிறந்த எழுத்தாளரை இழந்துவிட்டது.


# பென்சிலின் மருந்து உருவான கதை!




'பறவையை கண்டான் விமானம் படைத்தான், பாயும் மீன்களில் படகினை கண்டான், எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்' என்று பாவ மன்னிப்பு படப்பாடல் ஒன்றில் கவிஞர் கண்ணதாசன் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார். அறிவியல் உலகில் தற்செயலாகப் பல பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. மரத்தில் இருந்து அப்பிள் விழுவதைப் பார்த்ததும் தான், நியூட்டன் புவி ஈர்ப்பு விசையையே கண்டுபிடித்தார். அதேபோல் தான் அலெக்சாண்டர் பிளமிங்கும் (Alexander Fleming) பென்சிலினைக் கண்டறிந்தார். அந்தச் சுவையான சம்பவத்தைப் பற்றிப் பார்ப்போம்.

பிரீட்லிப் பெர்டினாண்ட் ரன்ஜே (Friedlieb Ferdinand Runge) என்பவரால், 1834ஆம் ஆண்டில் பீனோல் (Phenol) கண்டு பிடிக்கப்பட்டது. இதனுள் காபோனிக் அமிலம் (Carbonic acid) தான் உள்ளது. அவர் அதை நிலக்கரி தாரி (Coal tar) லிருந்து பிரித்தெடுத்தார். அக்காலத்தில் பீனோல் பரவலாக ஒரு தொற்றுநோய்க் கிருமி நாசினி ஆக ஜோசெப் லிஸ்ரர் (Joseph Lister) என்பவரால் முன்னோடியாகப் பயன்படுத்தப்பட்டது. 1900-1970இல் அது கபோலிக் சோப்பு என அழைக்கப் படும் ஒரு தொற்றுநோய்க் கிருமி நாசினி சோப்பில் பினோல் சேர்க்கப்பட்டு பயன் படுத்தப்பட்டது. தொற்றுநோய்க் கிருமி நாசினிகள் அறிமுகப்படுத்தப்பட முன், மருத்துவமனையில் 35 அறுவை சிகிச்சைகளில் 16 மரணங்கள் சம்பவித்தன. பீனோல் தொற்றுநோய்க் கிருமிநாசினி ஆக 1865ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்ட பிறகு 40 அறுவை சிகிச்சைகளில் 6 மரணங்கள் சம்பவித்தன. இறப்பு வீதம் கிட்டத்தட்ட 50 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகக் குறைந்துவிட்டது. அக்காலத்தில் இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை.

பிரசவத்தில் பெண்கள் இறப்பதும், பிறந்தபின் குழந்தைகள் இறப்பதும் சர்வ சாதாரணமாக இருந்த காலம். இலேசான வெட்டுக்காயங்களும், கீறல்களும் கூட மரணத்திற்கு இட்டுச் சென்றன. போரில் காயமடைந்த வீரர்களுக்கு கார்போலிக் அமிலம் (Carbolic acid), போரிக் அமிலம், ஹைட்ரஜன் பெராக்ஸைட் போன்ற தொற்று நோய்க் கிருமிநாசினி மருந்துகளையே அக்காலத்தில் பயன்படுத்தி வந்தனர். அலெக்சாண்டர் பிளமிங் 1881 ஒகஸ்ற் 06இல் ஸ்கொட்லாந்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். அவர் நான்கு குழந்தைகளில் ஒருவர். அவருக்கும் நான்கு குழந்தைகள். அவரது இளமைக் கல்வி இயற்கையெழில் சூழ்ந்த மலைப் பகுதியில் அமைந்தது. அங்குதான் இயற்கையை ரசிக்கவும், எதையும் கூர்ந்து நோக்கி அறியவும் அவர் பயிற்சி பெற்றார். தொழில்நுட்பக் கல்லூரிப் படிப்பை முடித்தபிறகு 16 வயதிலேயே கப்பல் நிறுவனம் ஒன்றில் அவர் அலுவலராகச் சேர்ந்தார். லிகிதராக வேலை செய்வது மனநிறைவை அளிக்க வில்லை. மாமனார் ஜோன் பிளெமிங் இடமிருந்து கிடைத்த உதவியினால் அவர் தனது 20 வயதில் மருத்துவக் கல்லூரியில் சேர வழி செய்தது. படிப்பை முடித்த பிறகு, நோய்க்கிருமிகளுக்கெதிரான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஆல்ம்ரொத் எட்வாட் ரைட் (Almroth Edward Wright) என்பவரிடம் உதவியாளராகச் சேர்ந்தார் பிளமிங். 1910இல் ஜெர்மன் விஞ்ஞானி போல் எர்லிச் (Paul Ehrlich) என்பவர் 'சிபிலிஸ்' (Syphilis) என்ற கொடிய பாலியல் நோய்த்தொற்றுக்கு 'சல்வார்ஸன்' (Salvarsan) என்ற மருந்தைக் கண்டு பிடித்திருந்தார். இரத்தத்தைப் பரிசோதித்து அந்த நோயை எளிதில் கண்டறியும் ஒரு மேம்பட்ட முறையை பிளமிங் அறிமுகப்படுத்தினார்.




நான்கு ஆண்டுகள் (July 28, 1914 – Nov 11, 1918) நடந்த முதல் உலகப்போரில் 1896இல் ரைட் (Almroth Edward Wright) குழுவினரின் கண்டுபிடித்திருந்த தடுப்பூசி மட்டும் பயன்படுத்தப்பட்டிருக்காவிடில் ஆயிரக் கணக்கானோர் தைபொய்ட் (typhoid) காய்ச்சலுக்குப் பலியாகியிருப்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

சுந்தரம் இந்திரராஜா அவர்களின் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

# BASEMENT FOR RENT

**BRIMLEY & LAWRENCE**
2+1 bedroom bsmt for rent. Sep. Entrance, Sep.laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.706.7973**

**MORNINGSIDE & OLD FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, utilities. Female preferred. TTC at door step. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.471.6815**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.855.6482**

**MIDDLEFIELD & FINCH**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking. No pets/No smoking. Students or couple preferred. Avail. August 05, 2021.
தொடர்புகளுக்கு : **416.754.4917**

**VICTORIA PARK & LAWRENCE**
1 bedroom bsmt for rent in a beautiful location. Sep. entrance. parking. Looking for working ladies or female students.
**416.288.9575 / 647.762.9575**

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walkout basement,1 parking, Only for Family, No Pet, no Smoking. Close to, TTC, College. Avail. August 15, 2021
தொடர்புகளுக்கு : **905.471.7667**

**MCCOWAN & HIGHGLEN**
2 bedrooms bsmt for Rent. Sep. Entrance, Parking. Close to bus, schools & HWY 407. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.540.1475**

**ALTONA & FINCH (PICKERING)**
one bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry . Avail. immediately
தொடர்புகளுக்கு: **647-237-2685.**

**MARKHAM & STEELES**
2 Bedroom walkout bsmt for rent. Sort term also welcome. Close to School & facilities. Avail. September 01, 2021.
**416.660.4874 / 416.258.8755**

**MORNINGSIDE & OLD FINCH**
2 bedrooms bsmt for rent. Sep. entrance 1 parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.7894**

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to Amazon, TTC, YRT. Avail. immediately. Female (working / student) only. தொடர்புகளுக்கு: **647-284-2735**

**ROSSLAND & CHURCH (AJAX)**
2 bedroom bsmt for rent. 2 parking & laundry. available Only for family & student girls only. Avail. August 01, 2021
தொடர்புகளுக்கு : **(647) 716-2706**

மேலும் பக்கங்கள் 14, 15, 16

31 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# BASEMENT FOR RENT

**TAUNTON & WHITES ROAD**
2 bedroom newly built basement for rent. Sep. entrance, parking, sep. laundry. No smoking. Avail. from August 01, 2021
தொடர்புகளுக்கு: **416-918-5065**

**BRIMLEY & MCNICOL**
2 bedroom basement for rent. All facilities included. Avail. immediately.
**647-762-6652 / 416-499-3273**

**9TH LINE & 14TH AVE.**
2 bedroom Bsmt for rent. Sep. Entrance, 1 parking. No pets. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **647-867-5307**

**VICTORIA PARK & FINCH**
2 bedroom walkout apartment basement for rent. parking, laundry, No smoking, no pets. Avail.immediately.
**647.979.3476/ 416.676.3538**

**MIDDLEFIELD & FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance, 2 parking. Avail. August 05, 2021.
தொடர்புகளுக்கு : **416.993.6519**

**STAINES & STEELES**
3 bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2021.
தொடர்புகளுக்கு : **647.889.3217**

**MIDLAND & EGLINTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Close to kennedy subway. Avail. September 01, 2021.
**416.750.0363/437.925.4063**

**KINGSTON & SHEPPARD**
3 bedroom Basement for rent. Sep. entrance. 2 full washroom. Avail. AUGUST 01, 2021.
**647.449.7709/416.298.0134**

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to all amenities. Avail. from September 01, 2021
தொடர்புகளுக்கு : **647 .740.1421**

**MARKHAM & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail.October 01, 2021
தொடர்புகளுக்கு : **416.201.1222**

**9TH LINE & HWY 7**
Legally finished 2 bedroom bsmt for rent. Sep. entrance & sep. laundry. Close to hwy407. Avail. August 01, 2021.
**416.509.0102 / 416.509.4443**

# BASEMENT FOR RENT

**SHEPPARD & NEILSON**
2 bedroom bsmt for rent. Sep. entrance parking. Close to all facilities. Avail. Avail. immediately.
**437.982.3330 / 647.237.6826**

**FINCH & LIVERPOOL - PICKERING**
2 bedroom bsmt for rent. kitchen, 1 full washroom, living room, laundry. Sep. entrance, 1 Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **(647) 606-7789**

**MARKHAM & STEELES**
3 bedroom bsmt for rent. Sep.entrance, laundry, utilities.Close to bus, bank,store. Preferred family only. Avail. immediately.
**647.772.5546 / 647.856.9907**

**BRIMLEY & DENISON**
2 Bedroom Bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**Contact Nathan: 416.843.0011**

**BRIMLRY & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, 1 Car parking. No pets / No smoking. Family preferred. Avail.immediately
**416.820.0258 / 416.912.8352**

**EGLINTON AVE E & MIDLAND**
1 bedroom basement apt for rent, with washer and dryer & parking. available immediately.
தொடர்புகளுக்கு: **416.880.3636**

**WARDEN & ELLESEMERE**
1 Bedroom Bsmt for rent. Sep. Entrance. Working female preferred for long term stay. Laundry & parking. Close to TTC.
தொடர்புகளுக்கு : **416.505.4449**

**MCCOWAN RD & HWY 401**
1 Bedroom bsmt for rent. Couple or singles. Rent $1200+HYDRO. Working person or 65+ seniors preferred.
**416.857.5252/416.752.4444**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, Sep. laundry. Close to school, bus. Avail. August 01, 2021.
தொடர்புகளுக்கு: **416.737.1146**

**MCCOWAN & DENISON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, internet. Female only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.908.1250**

**வீடு வாடகைக்குபெற்றிட / கொடுத்திட**
வாடகைக்கு வீடுகள், Condo, Bsmts போன்ற வற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்: **647.402.2937**

# BASEMENT FOR RENT

**NEILSON & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. entrance & a parking. Close to Malvern Mall, TTC, bus stop and HWY 401. Avail immediately.
**Call me at 416-894-2845.**

**NEILSON & ELLESMARE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, Laundry, Parking. Close to TTC, U OF T. No pets & No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.477.8746**

# ROOM FOR RENT

**MARKHAM & LAWRENCE**
1 room for Rent in a basement. Single women only. Sep. entrance.
தொடர்புகளுக்கு: **647-201-7016**

**MARKHAM & DENISON**
1 room for rent in a house. 1 Parking, laundry, internet. Close to all facilities Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.826.8811**

**MCCOWAN & EGLINTON**
big room for rent in a luxury condo. attached full washroom. Utilities. only female or couple preferred. Avail. immediately.
**416.569.9260/647.847.2465**

**SHEPPARD & MORNINGSIDE**
ROOMS for rent.
Close to all facilities. Prefer female only. Avail. From September 01, 2021
**647.854.5497 /647.719.2803**

**9TH LINE & 14TH AVE**
ROOM for rent in bsmt for rent. Close to YRT. Avail. August 01, 2021.
**(416) 648-1987 or (416) 669-3549**

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom apartment 1 master bedroom available August 1st Female or couples preferred close to all facilities $800.
தொடர்புகளுக்கு : **416.725.4735**

**MCLEVIN & NEILSON**
Room is available for rent immediately. Close to Colleges, Highway, Grocery stores and malls. Female or students preferred.
தொடர்புகளுக்கு: **647-710-6661**

**MARKHAM & LAWRENCE**
1 Room for rent. Sep. entrance, Sep. kitchen. Sep. Washroom. Close to TTC, HWY, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.706.4881**

**MCCOWAN & DENISON** சந்திப்புக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய இருண்டு அறை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : **647-678-2599**

**BRIMLEY & LAWRENCE**
1 bedroom for rent in the basement. Sep. entrance. No smoking/no pets. Working people/student preferred.
தொடர்புகளுக்கு : **647-855-5122**

## ROOM FOR RENT

**KENNEDY RD & EGLINTION AVE.**
1 Room for rent in a 2 bedroom apartment. Rent $900+HYDRO. Working person or 65+ seniors preferred.
**416.857.5252 / 416.752.4444**

**FINCH & PHARMACHY**
1 Room for rent in main floor. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.838.6636**

**WARDEN & FINCH**
Room for rent in condo. Seniors preferred. Food included.
**647.667.0482 / 416.902.4353**

## BASEMENT FOR RENT

**Elson & Markham**
1 Bedroom Bsmt apartment for rent. Sep.entrance. 1 parking, laundry. Close to bus service & shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647-989-0463**

## BASEMENT FOR RENT

**Birchmount & Ellesmere**
2 Bedroom Basement for rent. Sep.enterence. Closed to all facilities. Parking available.
**Please contact at 416 451 9520.**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, utilities.No pet or no smoke. Near Milliken Mills high school.Close to all facilities. Avail. September 01, 2021.
**647.927.6100 / 647.201.3415**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & ELLESEMERE**
3 bedroom bsmt for rent. 2 full washrooms. Sep. entrance, big kitchen. 2 parkings. Close to university, centennial College, 2 elementary schools. No pets or No Smoke. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.991.1069**

## BASEMENT FOR RENT

**NEILSON & MCLEVIN**
2 Bedroom bsmt for rent with furniture. 1 full washroom. Sep. laundry. Sep. entrance. No smoking & No pet allowed. Girl students, new immigrants & single family preferred. Avail. immediately.
**Please call at 647-330-5297.**

மேலும் பக்கங்கள் 13, 15, 16

## BASEMENT FOR RENT

**14TH AVE & MARKHAM**
Never lived new legal basement for rent with separate entrance, 2-bed rooms, bath, separate laundry, closer to 407, 14th Ave and Markham road. All amenities including schools, public transport nearby. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **416.278.2034**

## BASEMENT FOR RENT

**VICTORIA PARK & HWY 401**
2 bedroom basement with a washroom and kitchen and living room. Rent includes all utility costs and wifi included. One parking spot included with rent.
தொடர்புகளுக்கு : **647-779-9048**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
Newly Renovated 2 Bedroom Bsmt for. Separate entrance, 3 min walk to TTC, UFT, Centennial. Laundry. large bedroom, new Appliances & parking. prefer Small Family or Female Students,
தொடர்புகளுக்கு : **416.419.2300**

## BASEMENT FOR RENT

**Morningside & Finch**
2 bedroom basement for rent. The buses runs across to the house (939, 953 & 133)
**Please contact at (416)669-9254**

## BASEMENT FOR RENT

**9TH LANE AND 14TH AVENUE**
2 bedroom bsmt for rent $1750.00. 2 full washrooms. Newly build basement in a very good location. Close to schools and highways.
**416.918.9848/ 416.857.7603**

## BASEMENT FOR RENT

**MIDLAND & ST. CLAIR**
nearby to Midland and Eglinton 1 bedroom full bathroom, kitchen, laundry, parking, utilities & Wifi included. Sep. entrance. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.825.6880**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom renovated bsmt for rent. Kitchen, Living hall, washroom & laundry room. TTC within walking distance, shopping mall nearby & schools nearby. Avail. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.994.7849**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & ELLESMERE**
2 bedroom basement for rent. seperate entrance,1parking lot, No smoking,no pets. Close to Hospital, Scarborough town center and all facilities. Avail.immediatly.
தொடர்புகளுக்கு: **647.712.3328**

## BASEMENT/ROOM FOR RENT

**DANFORTH & EGLINGTON**
2 beadroom bsmt or rent. Sep. enratnce. 2 Rooms also avail for Rent. WiFi, Laundry, 24 hours bus service,Walking distance to Grocery stores, Pharmacy, Banks etc.Closer to Kennedy Subway, Scarborough Center, Bellemy Go station.
Contact : **647.869.9733**

## CONDO FOR RENT

**KENNEDY & SHEPPARD**
**Scarborough, Ontario**
Two Bedroom and One Washroom Condo For Rent. Close to all facilities. Available Immediately
**Contact: Kannan Phone No. 647-300-0417**

## ROOM FOR RENT

**OLD KENNEDY & STEELES**
1 room for rent. Shared kitchen, washroom, laundry. Renting for females only. Avail. immediately. Close to banks, stores, walking distance TTC buses & to Milliken GO train station & etc.
தொடர்புகளுக்கு : **647.680.1773**

## ROOM FOR RENT

**MCCOWAN & FINCH**
1 large rooms for rent in an Apartment with furniture. Parking, internet. No smoke or no pets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.276.6884**

## ROOM FOR RENT

**Ajax South** 3 அறைகளுடன் கூடிய **Bangalow house** இன் மேற்தளத்தில் இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. (Share washroom / Kitchen) வயோதிபர்கள் சாப்பாட்டுடன் பராமரிக்கப்படுவர். வேலை புரிபவர்களும் விரும்பத்தக்கது.
**647.608.6097 / 647-916-5990.**

## HOUSE FOR RENT

**ORTON PARK & ELLESMERE**
3 Bedroom house for rent. Washroom, kitchen, Parking. Close to all facilities. Avail. immediately. No Pets.
**647-998-0181/905 -471-2444**

## HOUSE FOR RENT

**WARDEN & ELLESMERE**
3 bedrooms bungalow house for rent. only main floor. Parking , laundry. Avail. September 01, 2021
**647.648.2596 /416.671.6255**

**MARKHAM & DENISON**
3 room for rent in a 4 room house. Parking, laundry, internet. Close to all facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.826.8811**

**Whites Road / Taunton (Pickering)**
4 bedroom 3 washroom Full house for rent Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு : **647.296.7932**

**MORNINGSIDE & STAINES**
4 Bedroom house for rent. 2.5 Wm, 2 Parking. Laundry. Close to Bus Stops, Stores & schools. Avail. Sept.15th , May be earlier.
தொடர்புகளுக்கு : **416-894-5904**

**NEILSON ROAD & MCLIVEN AVE**
3 Bedroom Townhouse for rent . 2.5 Washroom, 1 parking spot, Roof top terrace. Avail. August 01, 2021.
தொடர்புகளுக்கு : **647.393.3878**

**MORNINGSIDE & MCNICOLL**
3 bedroom house for rent Parking. Close to all facilites (No pet) Avail. September 01, 2021.
தொடர்புகளுக்கு : **416.648.7078**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 bedrooms 1 washroom Two-story Town house for rent. Private terrace, parking & Sep. laundry. Close to all major super markets, 401 & all amenities, one minute walk to TTC. Avail. October 01, 2021
**416-832-0982 / 647-785-3046**

## HOUSE FOR RENT

**Morningview Trail & Littles Road**
4 Bedroom house for rent. 3 Wash Room. Near School, Park, TTC & Daycare walking Distance. Priority Family. No Pet . Avail. August 31, 2021
**Contact: suthan 416.473.4200**
**E.Mail suthan06@yahoo.com**

## HOUSE FOR RENT

**MCLEVIN & NEILSON**
Fully renovated 3 bedroom house for rent. with 3 washrooms & double door garage. Close to Elementary & Catholic schools, shopping centres, bus stop and others. Family preferred. No smoking and no pets. Avail. from September.
**647.909.9529/647.770.3118**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
**வாடகைக்கு உள்ளது**
**அழையுங்கள். 647.861.8240**

## CONDO. FOR RENT

**BIRCHMOUNT & ELLESMERE.**
1 Bedroom condo for rent. Includes amenities. Laundry is inside the unit. Parking. Close to all facilities & ttc.
தொடர்புகளுக்கு: **416.505.4449**

**MIDLAND & EGLINTON**
1 big with for rent in a luxury condo. Attached full washroom Utilities. Couple or female only. Avail. immediately.
**416.569.9260 / 647.847.2465**

## CONDO FOR RENT

**MARKHAM & SHEPPARD**
மார்க்கம் & செப்பேட்டில் இரு அறைகளுடன், உடனடியாக குடியிருக்க தக்க நிலையில் தொடர்மாடி குடியிருப்பு (condo) வாடகைக்கு உண்டு.
மாத வாடகை $1950.00.
தொடர்புகளுக்கு: **647.761.6644**

## CONDO. FOR RENT

**NEILSON RD & MCLIVEN AVE**
2 Bedroom condo for rent.
2 washroom, balcony, 1 parking, laundry in building.
1 minute walking distance to bus.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.728.7261**

**உடனடி வாடகைக்கு, விற்பனைக்கு**

வீடுகள், கொண்டோக்கள் விற்க, வாங்க, வாடகைக்கு விட, வாடகைக்கு பெற்றுக்கொள்ள அழையுங்கள்
**Jey 416-816-9011**

## HOUSE / BASEMENT FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom **Bsmt** for rent with1 full washroom.1 Bedroom **house** for rent with attached main house. full wash room.Kitchen, Laundry, and Parking for all units. Utilities included. Single **rooms** are available as well. Avail. Immediately
தொடர்புகளுக்கு: **(416) 804- 3520**

## HOUSE / BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
4 bedrooms & 4 washrooms house for rent. 2 parking available.
Close to Shopping malls,TTC & YRT.
**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. Entrance, sep.laundry Avail. immediately.
**416.879.9603/647.295.9956**

## HOUSE/BASEMENT FOR RENT

**FINCH & MIDDLEFIELD**
1 bedroom basement for rent.
**BRIMLEY & STEELES**
1 bedroom basement for rent.
**MARKHAM & STEELES**
3 bedrooms house for rent.
தொடர்புகளுக்கு: **647.686.8590**

## SALE / RENT

**House for Sale / Rent.**

**Please contact for further details.**

**416-648-7283**

மேலும் பக்கங்கள் 13, 14

## HELP WANTED

**ITALIAN RESTAURANT**
PIZZA DELIVERY DRIVER & KITCHEN HELPER WANTED
தொடர்புகளுக்கு: **416.219.4116**

## வேலைக்கு ஆட்கள் தேவை

Scarborugh வில் அமைந்திருக்கும் **Pizza Pizza** விற்கு அனுபம் மற்றும், முழுப்பொறுப்புள்ள **Pizza maker/Cashier & Delivery Driver** தேவை. அனுபவத்தைப் பொறுத்து சம்பளம் வழங்கப்படும்
Contact: **647.221.3770**

## வேலைக்கு ஆள் தேவை

**Scarborough** வில் **Office reception** வேலைக்கு ஆர்வம் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு: **647. 761. 6644**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**HELP WANTED**
Looking for Cook or Kitchen Helper in Scarborough
Contact Sri: **416.388.0758**

## BASEMENT FOR RENT

**SIMCOE & TAUNTON**
3 bedroom 1.5 washroom 1 kitchen newly renovated bsmt for rent with sep.entrance. 2 parking spots. No pets/No smoking. Avail immediately.
**SALEM & KERRISON**
1 bedroom + den 1 washroom 1 kitchen newly renovated bsmt for rent. 1 parking spot. No pets/No smoking. Avail immediately.
**647.208.9305 / 647.216.4240**

## BASEMENT FOR RENT

**TAUNTON & BURKHOLDER ( pickering)**
from Markham & Steeles to pickering 10 minute.
1& 1/2 large walkout bsmt for rent. Sep. entrance, 1 Parking, sep. laundry. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.418.6934**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL:** 4 bedroom, 2 storey modern Semi-house for rent. 2 full bathrooms, laundry & finished basement with storage space. Excluding utilities. No pets, no smoking of any kind. Available immediately.
**MORNINGSIDE & MCNICOLL:** 3 bedroom, 2 storey modern Semi-house for rent. 3 full bathrooms, laundry & finished basement with storage space. Excluding utilities. No pets, no smoking of any kind. Available immediately
தொடர்புகளுக்கு: **416.520.5380**

## HOUSE / BASEMENT FOR RENT

**MARKHAM & PAINTED POST - Rent $1800+50 %**
**DONMILLS & STEELES Rent $1600+50 %**
3 bedroom + 2full washroom bsmt for rent. Sep. Entrance.
**MARKHAM & DENISON -** 2 bedroom bsmt for rent.
**Contact: 647.507.2148 / 647.864.1051**

## HOUSE / BASEMENT FOR RENT

**MORNINGSIDE / MCNICOLL**
1 Bedroom Basement unit with Separate entrance, kitchen, living room is available for rent from Aug 01, 2021. Close to TTC and all Amenities.
**ELLESMERE / MILITARY TRAIL**
3 Bedroom detached House in front of University of Toronto Scarborough Campus is available for Rent immediately. Parking available.
**Contact 416.786.0051**

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும், அவரவர் கல்வித்தகமைக்கும் ஏற்ற மணமகன் / மணமகள் எம்மிடம் தாராளமாக உள்ளன. தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

### மணமகன் தேவை

1.வயது 26, நட்சத்திரம் பூராடம், பாவம் 36, Work in RTN Bsc & Biology.
2.வயது 30 , நட்சத்திரம், சுவாதி Accountant, பாவம் $7^{3/4}$.
3.வயது 30 , நட்சத்திரம் திருவாதிரை Working tim horton , சுவாதி, பாவம் 27.

### மணமகள் தேவை

1.வயது 33, நட்சத்திரம் ஆயிலியம், பாவம் 40, engineear.
2.வயது 38 , நட்சத்திரம், பூசம் engineear U.S.A, 7இல் செவ்வாய், விவாகரத்து பெற்றவர்.
3.வயது 34 , நட்சத்திரம் புனர்பூசம், பாவம் 50, Diploma in business manegement.

தொடர்புகளுக்கு ;
**437.244.6737/+94.76.324.6309**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## HIRING

Looking for experienced kitchen staff at a popular Canadian restaurant at **MORNINGSIDE & HWY 401**. Full time and part time available. Training provided.

தொடர்புகளுக்கு: **647-287-1795**

## வேலைக்கு ஆள் தேவை

**MIDDLEFIELD & FINCH**
**GTA SQUARE**

தையல் வேலைக்கு உடனடியாக ஆள் தேவை.

தொடர்புகளுக்கு:
**647.761.9193**

## HELPER WANTED

வீட்டுத் திருத்த வேலைகளுக்கு முழுநேர உதவியாளர்கள் தேவை.

செல்வா: **416-824-0580**

## முதியோர் பராமரிப்பு

முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.

**647.512.9820 / 647.868.2440**

## HELP WANTED

அனுபவமுள்ள KITCHEN HELPER தேவை.

**SULASIE FOODS - SWEETS & PARTY SUPPLIES**

416.879.2725 / 416.712.2020

## HIRING

**Dental office**இல் **Dental Receptionist / Dental assistant** வேலைக்கு தகுதி உள்ளவர் தொடர்பு கொள்ளவும்

**647 -761-6644**

## முதியோர் பராமரிப்பு

முதியோர்களுக்கு பொறுப்பான, திருப்தியான, 24 மணித்தியால சேவை வழங்கப்படும். நீண்ட கால, குறுகியகால, தற்காலிக வதிவிட வசதி செய்து தரப்படும்.

**647.667.0482 / 647-325.9186**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**MIDDLEFIELD & MCNICOLL**

WAITERS WANTED

FRIDAY, SATURDAY, SUNDAY

மேலதிக விபரங்களுக்கு:
**416.335.3334 /416.274.3312**

## பராமரிப்பாளர் தேவை

ஸ்ரோவில் பகுதியில் 70 வயதான பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்க பெண் பராமரிப்பாளர் தேவை. ஊதியம் வேலை நேரம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : **416.558.4998**

## CLEANING வேலைக்கு ஆட்கள் தேவை

**Brampton, Vaughan**
**Milton Mississauga** ஆகிய இடங்களுக்கு **Restaurant Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்

தொடர்புகளுக்கு : **(226) 907-2336**

## வேலைக்கு ஆட்கள் தேவை/ HELP WANTED

Looking for employee's in **pickering** for **Wow WingHouse**.
From Monday - Sunday - From 3pm-12am

**pickering** பகுதியில் அமைந்துள்ள **Wow WingHouse** க்கு வேலைக்கு ஆட்கள் தேவை. From Monday - Sunday - From 3pm-12am

தொடர்புகளுக்கு: **416-799-0811**

## HELP WANTED

**Line cook Chef, kitchen helper, dishwasher**

Looking for experience serious, Line cook Chef, kitchen helper, dishwasher has availability 7 days full time or part time
Address: **AFFY's PREMIUM GRILL**
55 Lebovic Ave, C101. Scarborough

**Contact: 647-290-6992**

## STORAGE SPACE FOR RENT

**PORTUNION & HWY 401 (Centennial road)**

Brand new separate garage space for rent.
Clean & Easy access to storage. Parking included.
Close to HWY 402.

தொடர்புகளுக்கு : **416.315.1933**

## SPRAY PAINTED WANTED IN SCARBOROUGH

**LYNN FURNITURE FINISHING**

Looking for spray painter
Wood and MDF finisher
For More info please
Contact : **Raymond 416-878-1371**

## HELP WANTED

**Sauter's Inn Restaurant**

**AJAX** இல் அமைந்துள்ள **Resturant ( Pickering Village)** ஒன்றிற்கு உடனடியாக ஆள் தேவைப்படுகின்றது.

**KITCHEN HELPER /SORT ORDER COOK/BREAKFAST COOK**

**Please call - Kumar: 905.427.6760**

**(Please Call 3:00pm to 5:00pm) 109,Old kingston Road, Ajax.**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**YONGE & DAVENPORT** இல் அமைந்துள்ள RESTAURANTஇற்கு LINE COOK & Kitchen helper, DISHWASHER வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **647.637.5345**

## PIZZA STORE HELPER WANTED

**Stouffville** பகுதியில் இயங்கிவரும் ***PIZZA STORE*** க்கு **PIZZA *STORE HELPER* WANTED** தேவை. ***PIZZA* DILIVERY DRIVER *ALSO WANTED*.** Stouffville & Markham பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. கனடாவிற்கு புதிதாக வந்தவர்களும் விரும்பத்தக்கது. பயிற்சி வழங்கப்படும் Payment flexible.

தொடர்புகளுக்கு : **416.953.4933**

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC.**
**(SCARBOROUGH)**

உங்கள் பயணத் தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

ஒன்ராறியோ முழுவதும் லட்சக்கணக்காணோர் தங்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்கள்.

உங்கள் பங்கை செய்யுங்கள். தடுப்பூசியை போட்டுக்கொள் ளுங்கள்.

ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள், மருத்துவ மனைகள், டாக்டரின் காரியாலயங்கள், பார்மசிகள் மற்றும் பெருந்தொகையாக தடுப்பூசி போடும் இடங்களில் கிடைக்கும். ஒவ்வொரு தடுப்பூசியும் முன்பிருந்த சாதாரண நிலைமைக்கு நம்மை நெருக்கமாகக் கொண்டுவரும்.

ontario.ca/bookvaccine
இல் உங்கள் நியமிப்பை இன்றே பதிவுசெய்யுங்கள் அல்லது 300 மொழிகளில் உதவி பெற்றுக்கொள்ள
1-888-999-6488
ஐ அழையுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

## திருமுருகன்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

பொறுத்துக்கொள்ள முடியாமல் எங்களைக் குண்டர் சட்டத்தில் போட்டுப் பழிவாங்கிவிட்டது. முழுக்க முழுக்க பாஜகதான் எங்கள் கைதுக்குக் காரணம்.

**மெரினாவில் தடை இருந்தும் கூட்டத்தைக் கூட்டியது சரியா?**

இதே மெரினாவில்தான் தந்தை பெரியார் அரசியல் முழக்கமிட்டார். காந்தி ஆங்கிலேய அரசுக்கு எதிராகப் பேசினார். அறிஞர் அண்ணா அரசியல் வளர்த்தார். மெரினாவில் 15 நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளோம். அமைதியான முறையில்தானே நினைவேந்தலை நடத்தினோம். இது எங்கள் நாடு. நாங்கள் எங்கு வேண்டு மென்றாலும் நினைவேந்தல் நிகழ்ச்சியை நடத்து வோம். அதனை தடுக்கும் அதிகாரம் காவல்துறைக்கு கிடையாது.

'சென்னை மாநகர காவல்துறை சட்டம்' என்று ஆங்கிலேயர்கள் கொண்டுவந்த சட்டத்தை இப்போதும் கடைப்பிடித்து வருகின்றனர். 5 பேர் ஒன்றாகக் கூடினால் அனுமதி வாங்கவேண்டும் என்று ஆங்கிலேயர் தமிழரை ஒடுக்குவதற்காகக் கொண்டுவந்த சட்டம் அது. அதைப்போய் அன்றைய அதிமுக அரசு வெட்கமே இல்லாமல் பயன் படுத்தியது. அதிகம் பேர் கூடினதாலேயே சிறைத் தண்டனை கொடுக்க சட்டத்திலும் இடம் கிடையாது. அடிப்படை அரசியல் சாசனத்திற்கு விரோதமான எங்கள் கைது நீதி மன்றத்தில் நிற்காது என்பது அரசுக்கு நன்குத் தெரியும். அதனால்தான் பொய் வழக்குப் போட்டு குண்டர் சட்டத்தில் அடைத்தனர்.

**சிறையிலிருந்தபோது மிகவும் வருந்திய விஷயம்?**

செய்தித்தாளில் அனிதா மரணத்தைப் பார்த்துவிட்டுத் துடித்தேன். எங்களுடைய எந்த எதிர்ப்பையும் பதிவு செய்ய முடியாமல் கையறு நிலையிலிருந்தோம். பாஜக அரசின் சமூக நீதிக்கெதிரான நிலைப்பாடுகளால், தமிழரின் உரிமை மறுக்கப்பட்டு, அனிதாவின் மரணத்திற் கும் காரணமாக அமைந்தது. மேலும், எனக்கு நெருக்கமான ஓவியர் வீர. சந்தானம் இறப்பிற்கு செல்ல முடிய வில்லை. நாங்கள் கடைசியாக நடத்திய நினைவேந்தலில்கூட நின்றவர் அவர். தோழர் கௌரி லங்கேஷை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும். அவரது மரணத்தில் பங்கேற்க முடியாமல் போனது மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியது.

**மே பதினேழு இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்றப்போகிறீர்கள் என்று செய்திகள் வருகிறதே?**

இது அரசியல் இயக்கம்தான். தேர்தலில் போட்டியிடும் கட்சி கிடையாது. தேர்தலில் போட்டியிடவும் மாட்டோம். ஏனென்றால், இங்கு தேர்தல் அரசியல் தோற்றுப் போயுள்ளது. எந்த விதத்திலும் தேர்தல் அரசியலால் மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்பது இது வரை நிரூபணமாக வில்லை. ஊழல் மலிந்த மக்கள் விரோதத் திட்டங்கள், மக்களுக்கெதிரான நடவடிக்கைகள் மட்டும்தான் தொடர்ந்து கொண்டிருக் கிறது. தந்தை பெரியார் மாதிரி மக்களைத் திரட்டி நிற்கும்போது அரசு ஒழுங்காக ஆட்சி செய்யும். மக்கள் அதிகாரத்தையும் பெறமுடியும்.

இயக்கங்கள்தான் தமிழ்நாட்டுக்கு தேவை என்று நாங்கள் வலிமையாக நினைக்கி றோம். அதில், வலிமையான இயக்கமாக மே பதினேழு இயக்கம் இயக்கம் எழுந்து



நிற்கிறது. தமிழ் தேசியமும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையும்தான் எங்களின் அரசியல். மீத்தேன் திட்டம் வரப் போவதை நாங்கள்தான் முதன்முதலில் சொன்னோம். மீனவர் பிரச்சினைக்கும் முதலில் ஆய்வு செய்து அறிக்கைகள் கொடுத்தோம். தமிழ் தேசியம் என்பது தமிழருக்கெதிராக நடக்கும் அடக்கு முறைகளைக் கண்டிப்பது தான். ஈழமாக இருந்தாலும் சரி, தமிழ் நாடாக இருந்தாலும் சரி இரண்டிற்கும் சேர்ந்த அரசியல்தான் தமிழ் தேசியம். தமிழ் ஈழம், தமிழ்நாடு மட்டுமல்ல, மலேசியா, பர்மா, தென் ஆபிரிக்கா எனத் தமிழர் எங்கு இருந்தாலும் மே பதினேழு இயக்கம் தங்கள் குரலைப் பதிவு செய்யும்.

**அடுத்து என்ன திட்டம் வைத்துள்ளீர்கள்?**

தமிழ்நாடு முழுக்கப் பயணம் சென்று இயக்கத்தை வலுப்படுத்தப் போகிறேன். நாங்கள் தமிழ்நாடு முழுவதும் அரசியல் கட்டுமானத்தை உருவாக்கப் போகிறோம்.

**இளைஞர்களுக்கு சொல்ல விரும்புவது?**


இயக்கங்களாக மாறுங்கள். அரசியலில் இறங்குங்கள். அரசியலில் இறங்குவ தென்பது வார்டு மெம்பர், எம்.எல்.ஏ. பதவிகளுக்கு நிற்பதல்ல. மக்களுக்கான சமூகப்பணிகளில் இறங்குங்கள். இளைஞர் வலிமையான தமிழ் தேசியத்தைக் கட்டமைக்க வேண்டும். அந்த தமிழ் தேசியத்தை தேர்தல் முறையினால் கட்டி எழுப்பிவிட முடியாது. களத்தில் நின்றுதான் உருவாக்க வேண்டும்.

**முந்தைய காங்கிரஸ் ஆட்சி - இன்றைய பாஜக ஆட்சி ஒப்பீடு?**

இரு கட்சிகளுமே ஒன்றுதான். பாஜக கொண்டுவந்த அத்தனை திட்டங்களை யும் ஆரம்பித்து வைத்தவர்கள்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

# ஜகமே தந்திரம்-திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

தனுஷின் நாற்பதாவது படமான இப்படம் கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவலால் யூன் 2021இல் Netflixஇல் வெளியானது.

இப்படத்தில் தனுஷ் பரோட்டா விற்பவராகவும் அடியாளுமான சுருளி என்னும் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். அவர் அடிதடியில் காலங்கழிப்பதால் அவருக்குத் திருமணம் ஆகவில்லை.



பணத்துக்காக எதையும் செய்யக் கூடியவரான சுருளிக்கு லண்டனுக்குச் செல்ல ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது. அங்கு ஆங்கிலேயரான Peter என்ற அடிதடியில் ஈடுபடும் குழு ஒன்றின் தலைவருக்கு (gangster) சுருளியின் உதவி தேவைப் படுகிறது. எனவே சுருளியும் Peter இடம் அதிக சம்பளத்திற்கு வேலைக்குச் சேர்கிறார்.

சிவதாஸ் என்பவர் Peterஇற்கு எதிரான ஒரு குழுத் தலைவன். தமிழரான சிவதாசைக் கண்காணிப்பதே சுருளியின் வேலையாகும். தனது தொழிலிலும் பணத்திலும் மட்டுமே கவனம் செலுத்தும் சுருளி, இனவாதியான Peterஇற்குத் துணையாக இருந்து சிவதாசைத் தோற்கடிக்கும் முயற்சியில் இறங்குகிறார்.

ஒரு சந்தர்ப்பத்தில் சிவதாசும் சுருளியும் சந்திக்கும்போது சிவதாஸ் சுருளியைத் தனது குழுவில் சேருமாறு கேட்கிறார். சுருளி சிவதாசின் குழுவில் சேருவாரா? அல்லது பண ஆசையால் சிவதாசை Peterஇற்குக் காட்டிக் கொடுப்பாரா? என்பதைப் படத்தை பார்த்து அறியுங்கள்.

இப்படத்தின் இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் ஜிகர்தண்டா, பேட்ட போன்ற படங்களை இயக்கிப் பிரபலமானவர். இப்படமும் முதல் கூறிய படங்களைப் போல் பொழுதுபோக்கு, அடிதடிப் படமாக இருக்க முயற்சிக்கிறது. அவ்வழியில் இப்படமும் இயக்குனரின் பாணியில் சில காட்சிகள் பொழுதுபோக்காகவும் நகைச் சுவையாகவும் இருக்கின்றன. ஆனால் "ஜகமே தந்திரம்" இவற்றைவிட சமூகக் கருத்துகளை முன்வைக்க முயலுகிறது.



Peter ஓர் இனவாதி. தனியார் சிறைச் சாலை ஒன்றை நடத்துகிறார். அரசாங்கத்தால் சிறைத் தண்டனை வழங்கப்படும் குடிவரவாளர்களை இச்சிறைச்சாலையில் பராமரித்து அரசிடம் இருந்து பணத்தைச் சம்பாதிப்பவர். மறு பக்கத்தில் சிவதாசின் குழுவில் இலங்கைத் தமிழரும் இருக்கின்றனர். அவர்கள் ஆயுதக் கடத்தல் மூலம் பணம் சேகரித்து இங்கிலாந்திற்குக் குடி வருபவர்களுக்குப் பண உதவியும் சட்ட உதவியும் செய்கின்றனர்.

இயக்குனர் ஒரு பொழுதுபோக்குப் படம் மூலம் முக்கிய கருத்துக்களைத் தெரிவிக்க முயலுகிறார் எனத் தெரிகிறது. இவ்வாறாக கதாநாயகன் மனம் மாறித் திருந்துவதன் மூலம் கருத்துக்களைத் தெரிவிக்கும் பொழுதுபோக்குப் படங்கள் பலவற்றை நாம் கண்டுள்ளோம். இப்படத்தில் நகைச்சுவையான சண்டைக் காட்சிகள் இருப்பதாலும், இலங்கையில் நடைபெற்ற கலவரம், அகதிகளின் சட்ட பூர்வமற்ற கடற் பிரயாணம், இங்கிலாந்தில் குடிவரவாளர்களுக்கு எதிரான இனவாதம், ஆயுதக் கடத்தல் எனப் பல விடயங்களை இயக்குனர் தொட்டுச் செல்ல முயற்சிப்பதால் அவரால் ஒன்றையும் போதிய அளவு விபரமாகக் கூற முடியவில்லை.

இருந்தாலும் இந்தியாவில் வாழ்வோருக்கு இக் கருத்துகளுடன் வெளிவரும் தமிழ் படம் புதிதாக இருக்கலாம். எனவே இது ஒரு நல்ல முதல் முயற்சி எனலாம்.

# பென்சிலின்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

பர். 33 வயதான பிளமிங், இராணுவத்தில் சேர்ந்தார். பிரான்ஸ் கள ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் றோயல் இராணுவ மருத்துவப் படைகளில் ஒரு தலைவரானார். முதலாம் உலகப் போரின்போது படை வீரர்கள் பலர் காயமடைந்து காயங்களில் தொற்றுநோய்க்கிருமிகள் புகுந்து நோய்வாய்ப்பட்டு இறந்தனர். இதைக் கேள்விப்பட்டு தொற்று நோய்க் கிருமிகளைக் கொல்லும் மருந்தைக் கண்டுபிடிப்பேன் என்று சபதம் கொண்டார் பிளமிங். அப்போ இருந்த நோய்க் கிருமி நாசினி மருந்துகள் ஆழ்ந்த காயங்களுக்குப் பொருந்தாது, இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களை அழித்து மேலும் பலர் இறப்பதற்கே வழிவகுத்தன என்று பிளமிங் நிரூபித்தார். உப்பு நீர் ஆழமான காயங்களை சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படுதல் நன்மை தரும் என்று நிரூபித்தார். குறைபாடற்ற தொற்றுநோய்க் கிருமிநாசினி மருந்தைக் கண்டுபிடிப்பதில் அவர் கவனம் திரும்பியது.

பல்வேறு வகை நுண்ணுயிர்களை தட்டுகளில் வளர்த்து அவற்றின் இயக்கங்களை அவர் ஆராயத் தொடங்கினார். அவருக்கே தடிமல் ஏற்பட்டிருந்த வேளையில் அவரது மூக்கிலிருந்து ஒழுகிய நீரிலிருந்தே ஓரிரு சொட்டுகள் எடுத்து பாக்ரீரியாக்கள் அடங்கிய தட்டில் வைத்து வளர்த்தபோது, சளித்திரவத்தைச் சுற்றியிருந்த பாக்ரீரியாக்கள் மட்டும் அழிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார். இதே போல் கண்ணீர், உமிழ் நீர், சிதல் போன்ற உடலில் சுரக்கும் பல திரவங்களை எடுத்து ஆராய்ச்சிக்கு உட்படுத்தினார். இந்த திரவங்கள் அனைத்திற்கும் நோய்க்கிருமிகளை வளராது தடுக்கும் ஆற்றல் இருப்பதைக் கண்டார். இயற்கையிலேயே அமைந்த இந்த நோய்க்கிருமி நாசினிக்கு 'லைசோசைம்' (lysozyme) எனப் பெயரிட்டார். அவர் 41 வயதாக இருக்கும்போது 'உடல் திசுக்கள் இயந்திரத்தனமாக தொழில்ப்பட்டு சுரப்பிகளை (கண்ணீர், உமிழ் நீர், சிதல்) சுரந்து பெரும்பாலான நோய்க்கிருமிகளை ஒரு கிருமி நாசினி மருந்து போல் நின்று கொன்று கழுவுகின்றது, என்பது இவரது முதல் கண்டுபிடிப்பு 1922இல் வந்தது.

லண்டனில் உள்ள சென். மேரி மருத்துவமனையில் கிருமிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும்போது, 1928இல் ஓகஸ்ற் மாதத்தில், பிளெமிங் மனைவி மற்றும் இளைய மகனுடன் அவர் ஒரு விடுமுறையில் ஆய்வுப் பொருட்களை அப்படியே வைத்துவிட்டுச் சென்றார். அதில் ஒரு தட்டு மூடாமல் இருந்தது. சுற்றுப்புறம் அசுத்தமாக இருந்தது. அப்போது வீசிய காற்றால் மெல்லிய பூஞ்சணம் அந்தத் தட்டில் படிந்திருந்தது. சில நாட்கள் கழித்து அந்தத் தட்டை ஆராய்ந்து பார்த்தார் பிளமிங். அப்போது பூஞ்சணம் படிந்த இடத்தில் கிருமிகள் முழுவதும் அழிந்திருந்தன. மற்றப் பகுதியில் பெருகி இருந்தன. லைசோசைம் அதுவரை செய்திராத ஒரு செயலை காளான் செய்திருந்ததைத் தற்செயலாகக் கண்டார். கொப்புளங்கள், கட்டிகள், மூக்கு, தொண்டை, தோல் இவற்றில் ஏற்படும் தொற்றுநோய்களை வர வழைக்கும் ஸ்டாபைலொகாக்கி (Staphylococcaceae) எனப்படும் கிருமிகளை காளான் அழித்திருந்தது. அதுமட்டுமல்ல, அந்தக் காளானின் சாறு வெள்ளை அணுக்களை அழிக்கவில்லை என்றும், வேறு திசுக்களைப் பாதிக்கவில்லை என்றும் சோதித்துத் தெரிந்து கொண்டார். காளானில் பரவிய பூஞ்சணத்தின் பெயர் பென்சிலியம் நோராரம் (Penicillium notatum). உடனே பிளமிங் அந்தப் பூஞ்சணத்தைப் பயன்படுத்தி ஒரு மருந்து தயாரித்தார். 'பெனிசிலின்' எனப் பெயரிட்டார் பிளெமிங்.

இது நடந்து பல ஆண்டுகளுக்குப்பின் பிளமிங் ஒரு நவீன ஆய்வு கூடத்துக்குச் சென்றார். அங்கே ஆய்வுக் கருவிகள் பளபளப்பாகவும், தூய்மையாகவும் இருந்தன. சுற்றுச் சூழல் தூசியற்றும் குளிரூட்டப்பட்டும் இருந்தது. அப்போது அங்கிருந்த ஒருவர் 'உங்களுக்கு அதிர்ஷ்டமே இல்லை. ஒரு தரமான ஆய்வகம் கூட உங்களுக்குக் கிடைக்கவில்லையே? அப்படி கிடைத்தால் நீங்கள் இன்னும் நிறைய மருந்துகளைக் கண்டுபிடித்திருப்பீர்களே' என்று சொன்னார். அதற்கு பிளமிங் அமைதியாக, 'நீங்கள் சொல்வது சரிதான். ஆனால், நிச்சயமாகப் பென்சிலினைக் கண்டுபிடித்திருக்க மாட்டேன்' என்றார்.

இன்றும் நோய்க்கிருமிகளை (பக்ரீரியாவை) எதிர்க்கும் நுண்ணுயிர் எதிர்ப்பி (antibiotic) மருந்து பென்சிலின். நோய்க் கிருமிகள் உடலில் எந்தப் பகுதியை தாக்கியிருக்கிறது அல்லது உடலில் காயப்பட்ட பகுதியை நோய்க்கிருமிகள் (பக்ரீரியா) தாக்காமல் பாதுகாக்க பென்சிலின் குடும்பத்தைச் சேர்ந்ததும் வலுக் குறைந்த அல்லது கூடிய நுண்ணுயிர் எதிர்ப்பிகளை (Penicillin G, Penicillin V, nafcillin, oxacillin, dicloxacillin, ampicillin, amoxicillin, carbenicillin, ticarcillin, and piperacillin) மருத்துவர் தருவார். மருத்துவர் தரும் நோய்க் கிருமிகளை எதிர்க்கும் குளிசைகள் முழுவதையும் பாவித்து முடிக்க வேண்டும். அப்போது தான் நோயை உண்டாக்கி உடலில் ஆக்கிரமித்து இருக்கும் முழு நோய்க்கிருமிகளையும் கொன்று ஒழிக்க முடியும்.

இந்த மருந்து உலகில் மில்லியன் கணக்கான மக்களின் உயிரைக் காப்பாற்றியுள்ளது. அலெக்சாண்டர் பிளமிங் பென்சிலின் மருந்தை கண்டுபிடிக்கக் காரணமான 90 ஆண்டுகள் பழைமையான பூஞ்சணம், 2017 மார்ச் மாதம் 1ஆம் திகதி லண்டனில் 14,600 அமெரிக்க டொலருக்கு (£11,875or CA$ 19,842) ஏலம்போயுள்ளது.

பிளமிங் ஆறாம் ஜோர்ஜ் மன்னரால் 1944ஆம் ஆண்டில் நைட் (Knight) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1945ஆம் ஆண்டில் அலெக்ஸாண்டர் பிளமிங் (Sir Alexander Fleming), ஹோவர்டு ஃப்ளோரே (Sir Howard Walter Florey), எர்னஸ்ற் செயின் (Ernst Boris Chain) ஆகிய மூவருக்கும் மருத்துவம் அல்லது உடலியங்கியலுக்கான நோபெல் பரிசு வழங்கப்பட்டது. 1999ஆம் ஆண்டில் ரைம் சஞ்சிகையால் வெளியிடப்பட்ட இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான 100 நபர்களின் பட்டியலில் அலெக்சாண்டர் பிளெமிங்கும் உள்ளடக்கப்பட்டார். 2000 ஆம் ஆண்டு நிறைவுறும் தறுவாயில் சுவீடனிலிருந்து வெளிவரும் பிரசித்தி பெற்ற மூன்று சஞ்சிகைகள் பென்சிலினை கடந்த ஆயிரமாண்டு காலத்தின் சிறந்த கண்டுபிடிப்பாக அறிவித்தன. 2002ஆம் ஆண்டில் பி.பி.சி.யால் மக்களின் வாக்களிப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பிரித்தானியாவின் முக்கியமான 100 நபர்களின் பட்டியலில் அலெக்சாண்டர் பிளெமிங்கும் உள்ளடக்கப்பட்டார். அலெக்சாண்டர் பிளெமிங்கின் ஞாபகார்த்தமாக அண்டவெளியிலுள்ள சூரிய குடும்பத்தில் ஒரு சிறுகோளுக்கு 91006 பிளெமிங் (91006 Fleming) எனப் பெயரிடப்பட்டது. பெரும் விஞ்ஞானி அலெக்சாண்டர் பிளேமிங் மார்ச் 11, 1955 அன்று காலமானார்.

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING

$2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credit Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 1.9% | | $1,405.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent Lic# M12002440
info@mortgagesolutions.ca
www.MortgageSolutions.ca
Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

Prime + 1% Lower Rate

$50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5


வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living


Welcoming new patients of all ages since 2000 at ...
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
Bridletowne Dental
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3.
(Midland & McNicoll, MAXUM Building,
In the RONA PLAZA)
www.bridletownedental.com

PLUS YOU DRIVING SCHOOL
CERTIFIED ROAD SAFETY INSTRUCTOR
NOW HIRING DRIVING INSTRUCTORS
Training will be provided
For more Info:
Balan 416.999.7727



வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2

LAND FOR SALE
9th Line and Main St. Stouffville
Site plan approved for 12 townhouses
Asking $5.2M
Contact: Gulshan Sharma Broker
416.321.6969
HOMELIFE GTA REALTY INC.
5215 Finch Ave. E., #203, Toronto ON, M1S 0C2


INDRA MICHAEL XAVIER
Broker
647.995.6829
indra.m.xavier@gmail.com
Buying Home/ Selling / Investing
HomeLife/Future Realty Inc.,

# திருமுருகன்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

காங்கிரஸ்தான்.

## ஏழு பேர் விடுதலை இன்றைய திமுக ஆட்சியிலாவது சாத்தியமாகுமா?

ஏழு பேர் விடுதலைக்கு தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பெரிய ஆதரவு உள்ளது. விதி 161இன் கீழ் ஏழு பேரையும் விடுவிக்கும் அதிகாரம் தமிழ்நாடு அரசுக்கு உள்ளது. தமிழ்நாடு அரசு அதனை பயன்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.



ஒன்றிய அரசின் ஆலோசனைக்காக தமிழ்நாடு அரசு காத்திருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், அதற்கென்று ஒரு கால அவகாசம் உள்ளது. ஏற்கெனவே 28 வருடங்கள் நியாயமற்ற வகையில் ஏழு பேரும் சிறையில் இருந்துவிட்டனர். இந்நிலையில், ஒன்றிய அரசு முடிவைக் காரணம் காட்டி, அவர்கள் விடுதலையை மேலும் சில வருடங்களோ மாதங்களோ கடத்துவது சங்கடமானது. ஒன்றிய அரசு முடிவுதான் முக்கியமென்றால் சிறை விடுப்பில்கூட ஏழு பேரையும் வெளியே விடலாம்.

சஞ்சய் தத் விடுதலையுடன் இந்த ஏழு பேர் விடுதலையை ஒப்பிடலாம். தண்டனைக் காலத்தில் நிறைய நாட்கள் அவர் சிறை விடுப்பில்தான் இருந்தார். படப்பிடிப்புகளில் கலந்துகொண்டார். தண்டனைக் காலம் முடியும் முன்பே விடுதலை செய்யப்பட்டார். ஆனால், இந்த ஏழு பேரும் தண்டனைக் காலம் முடிந்தும் சிறையில் இருக்கின்றனர். சாமானிய மக்களுக்கு ஒரு நீதி, பணக்காரர்களுக்கு ஒரு நீதி என்ற பாரபட்சமான நீதியே இங்குள்ளது என்பதையே இது காட்டுகிறது.

# இயற்கை... 3



காலைக் கதிரவன் நீலத்திரையிற் – செங்
கதிர்கள் பரப்பி உதிக்கையிலே
கோல நிலவைப் பொழிந்தநிலா - எங்கோ
கூனிக் குறுகி மறைந்திடுமே!

சோலைக் குயில்களும் கூவிடுமே – பேடை
சொக்கிட ஆண்மயில் ஆடிடுமே
பாலைப் பொழிந்த பசுக்களுமே – கூடிப்
பசும்புல் மேய்ந்திடச் சென்றிடுமே!

விட்டுவி லகிடும் காரிருளே - பூவின்
மொட்டு விரிந்து மலர்ந்திடுமே
சிட்டுக ளோடுதே னீக்களுமே – தேடித்
தேனினை மாந்தி மயங்கிடுமே!

'கா!கா!' வெனக்கரிக் காகங்களும் - சும்மா
கரைந்தே கூட்டமும் கூட்டிடுமே
தாத்தா வுடன்பாட்டி முதலாக – வீட்டிற்
சகலரை யுந்துயில் எழுப்பிடுமே!

உந்தியே கிளையெலாம் பற்றிநின்றே - தாவும்
மந்திகள் கூட்டமாய்க் கனியுண்னுமே
விந்தையாய்த் தனிமையிற் கூவிவருங் - குயில்
சொந்தமாயக் கீதம் இசைத்திடுமே!

சேவலும் 'கொக்கரக் கூ'வென்றே – வண்ணச்
சிறகினை விரித்துக் கூவிடுமே
ஆவலாய்க் கோழியும் கொக்கரித்தே - குஞ்சை
அணைத்த படிஇரை தேடிடுமே!

கிளிகளும் துணையொடு கொஞ்சிநின்றே –
அன்பாய்க்
கிள்ளை மொழிதனிற் பேசிடுமே!
களிகொளும் மான்களும் மிரண்டபடி – துள்ளிக்
காவினில் தளையுணச் சென்றிடுமே!



பல்வைத்திய கலாநிதி
இளமுருகனார் பாரதி

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

கடனே இல்லாதவன் பணக்காரன்
நோயே இல்லாதவன் இலட்சாதிபதி
கோபமே இல்லாதவன் கோடீஸ்வரன்



# மயக்கம்



ஆண்களுக்கு வரும் ஆதிக்க மயக்கம்
பெண்களுக்குப் பொன்னின் மேல் மயக்கம்
அரசியலாருக்கு என்றும் பதவி மயக்கம்
காமுகருக்குச் சிற்றின்ப மயக்கம்
முற்றும் துறந்தவருக்கு முக்தியில் மயக்கம்
பகவானை நம்புவோர்க்குப் பக்தி மயக்கம்
மதுவின் மயக்கம் மதியைக் கெடுக்கும்
மங்கை மயக்கம் மதிப்பைக் கெடுக்கும்
பணத்தின் மயக்கம் பண்பைக் கெடுக்கும்
அகந்தை மயக்கம் அன்பைக் கெடுக்கும்
காதலின் மயக்கம் கண்ணை மறைக்கும்.

சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம்